# முருகன் துணைவர் வரலாற்றுத் தடங்கள் - ஓர் இலக்கியத்தொகுப்பு.



பதிப்பாசிரியர்
திரு. சி. தியாகராசா

# முருகன் துணைவர் வரலாற்றுத் தடங்கள்

## – ஓர் இலக்கியத் தொகுப்பு


பதிப்பாசிரியர்

திரு. சி. தியாகராசா



செங்குந்தா வீதி,
திருநெல்வேலி.

# நூல் விபரம்

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | முருகன் துணைவர் வரலாற்றுத் தடங்கள் - ஓர் இலக்கியத் தொகுப்பு. |
| பதிப்பாசிரியர் | : | திரு. சி. தியாகராசா, செங்குந்தா வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். |
| பதிப்பு | : | முதற்பதிப்பு 2015 |
| வெளியீடு | : | 14.11.2015 |
| பக்கங்கள் | : | V + 64 |
| எழுத்து | : | 12 புள்ளி |
| கணனி வடிவமைப்பு | : | எஸ். எஸ். ஆர். பிறிண்டேர்ஸ், 17, சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 0777165589 |

உள்ளே ............................

முன்னுரை iii - v

## பொருளடக்கம்

01. கலியுகவரதன் திருமுருகன் 01

02. திருக்கை வழக்கம் 05

03. கலித்துறை மாலை 15

04. தசாங்கம் 23

05. ஊசல் 27

06. பெரியகட்டியம் 29

07. சின்னக்கட்டியம் 31

08. செங்குந்தர் சிலாக்கிய வரலாறு 32

09. கல்வெட்டுக்கள் கூறும் செங்குந்தர் சமூகச் சிறப்புக்கள் 42

10. செங்குந்தர் மரபு விளக்கம் 46

11. செங்குந்தர் குலமாட்சி 50

12. காஞ்சிபுரம் 55

13. களிப்பொருபது 60

# முன்னுரை

அன்போடு அறிவு சார்ந்து இயங்கும் ஆன்மீகத் தமிழ்ப்பெருமக்களுக்கு எனது உளம் நிறைவான வணக்கத்தை முன்மொழிகிறேன்.

"யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்னும் உயர்ந்த பண்பினைப் பெற்றவர் எமது தமிழ்ச் சான்றோர். அவர்களின் அடிச்சுவட்டினைப் பின்பற்றி என் தேடலில் கிடைக்கப்பெற்ற சிலவற்றினை ஏனையவர்களும் அறிய வேண்டும் என்னும் பேரவாவில் படிப்பவர்கட்குச் சலிப்புத் தட்டாவண்ணம் மிகச் சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதியுள்ளேன். பல அறிஞர்களின் படைப்புக்களில் இருந்து தொகுத்து இச் சிறிய நூலினை உங்கள் முன் வைக்கிறேன். இதன் மூலம் உலகத்தில் தோன்றி வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஓர் பூர்வீகச் சமூகத்தின் வரலாறு அழிந்து போகாவண்ணம் ஓரளவேனும் காப்பாற்றப்படலாம் என்பது எனது நப்பாசையாகும்.

இச் சமூகமானது தேவர்களின் துயர் துடைப்பதற்காக சிவபெருமானது நெற்றிக் கண்ணில் இருந்து தோன்றிய தீப்பொறிகள் மூலம் ஆறுமுகக் கடவுள் தோற்றுவிக்கப்பட்ட போது, உமையவளின் காற்சிலம்பு மணிகளில் தோன்றிய நவ வீரர்களான வீரவாகு தேவர், வீரகேசரி, வீரமாமகேச்சுரன், வீரமாபுரேந்திரன், வீரராக்கதன், வீரமார்த்தாண்டன், வீராந்தகன், வீரதீரன், வீரமாமகேந்திரன் ஆகியோரும் நவசக்திகளின் வியர்வைத் துளிகளில் இருந்து தோன்றிய இலட்சம் வீரர்களதும் வழித் தோன்றல்களாவர்.

இவர்கள் தேவர்களாகத் தேவலோகத்தில் சூரியகுலத் தேவமாதர்களைத் திருமணம் செய்து வாழ்ந்தார்கள். எனவும், பின்னர் சோழமரபினனான முசுகுந்த மன்னனுக்குத் திரு முருகக் கடவுளின் பணிப்பிற்கேற்பப் பூலோகத்தில் மானிடப் பிறப்பெடுத்து, அவனுக்குப் படைத் துணைவர்களாக இருந்து அவனுக்காகப் பல தேசத்து மன்னர்களையும் வெற்றி கொண்டு அவனைச் சக்கரவர்த்தியாக்கியவர்கள் எனவும் வரலாறுகள் சான்று பகர்கின்றன.

வீரவாகுதேவர் தனது மகளான சித்திரவல்லியை முசுகுந்தச் சக்கரவர்த்திக்கு மணம் முடித்து வைத்தார் எனவும், இவர்களே பூலோகத்தில் தோன்றிய செங்குந்த சமூகத்தினரின் முதற் சந்ததியினர் எனவும், செங்குந்தர் சுப்பிரமணியக் கடவுளின் தம்பியராக வந்த நவவீரர் மரபினராதலின் உபசுப்பிரமணிய கோத்திரத்தினர் எனவும், சுப்பிரமணியக் கடவுளின் போர்ப் படையில் முதன்மை பெற்றிருந்தமையால் முதலியார் என்னும் பட்டத்திற்குரியவர் எனவும் முன்னைய வரலாறுகள் மூலம் அறிய முடிகிறது.

மேலும், இவர்கள் சமயப் பற்று, தமிழ்ப் பற்று, குலப் பற்று, மிக்கவர்களாக வாழ்ந்திருக்கிறார்கள், இவர்கள் தம் குலப் பெருமையை நாடறியச் செய்யும்

ஒரு தமிழ் இலக்கியத்திற்காகத் தம் இனத்தவர்களில் குடிக்கொரு தலைமகனான ஆயிரத்தெட்டுப் பேரின் தலைகளை வெட்டி அதன் மூலம் ஒரு சிங்காசனத்தை அமைத்து அதன் மீது தம் குலத்தவரான கவிச் சக்கரவர்த்தி என்னும் ஒட்டக் கூத்தர் அவர்களை அமரச் செய்து அவர் மூலம் "ஈட்டி எழுபது" என்னும் அற்புதத் தமிழ் இலக்கியத்தைப் படைத்த வீர வரலாற்றினைக் கொண்டவர்கள்.

இம் மரபினரின் பெருமைகளையும், சிறப்புக்களையும் கச்சியப்ப சிவாச்சாரியார் கந்தபுராணம் என்னும் நூலில் விரிவாகக் கூறியுள்ளார் எனவும், அவை பிற்காலத்தில் பதிப்பிக்கப்பட்டவர்களால் மறைக்கப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகிறது. இருந்தும் அவற்றை ஆதாரமாகக் கொண்டு பிற்காலத்து அறிஞர்கள் பலர் புராணங்களாகவும், இலக்கியங்களாகவும், தனிப் பாடல்களாகவும் பாடியுள்ளார்கள். இவற்றில் தனித் தனிப் பிரபந்தங்களும், சிற்றிலக்கியங்கள் என்று தமிழில் வழங்கிவரும் அந்தாதி, கோவை, பிள்ளைத் தமிழ் மாலை, ஊசல், கட்டியம் என்பனவும் காலத்திற்குக் காலம் பல அறிஞர்களால் பாடப்பட்டுள்ளன. இவைகளைத் தொகுத்து காஞ்சிபுரம் "ஸ்ரீ நாகலிங்க முனிவர்" என்னும் பெருமகனார் "செங்குந்தர் பிரபந்தத் திரட்டு" என்னும் நூலை விளக்க உரையுடன் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

இவற்றை விட இந்தியாவில் பல மாநிலங்கள், மாவட்டங்களில் கண்டெடுக்கப்பட்ட இருநூற்றெட்டுக்கும் மேற்பட்ட கல்வெட்டுக்கள், செப்பேடுகள், ஓலைச் சுவடிகளில் இச் சமூகத்தினரின் பல்வேறு சிறப்புக்களை அறியக் கூடியதாக உள்ளன.

# 1. கலியுகவரதன் திருமுருகன்

சேந்தனை கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித் தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார் மயில்வாகனனைச்
சாந்துணைப் போதும் மறவா தவர்க்கொரு தாழ்விலையே

-கந்தர் அலங்காரம்-

உடலினை ஓம்புவதற்கு உணவு தேவைப்படுவது போன்று உள்ளத்தை வளர்ப்பதற்கு தெய்வ வணக்கம்(தேவோபாசனை)இன்றியமையாததாகும். இக் கலியுகத்தில் திருமுருகனின் மூர்த்தமே உபாசனைக்குச் சிறந்ததென்பர். திருமுருகனே கலியுகவரதன், இக்காலத்தில் முருக வழிபாடே மற்ற மூர்த்தங்களை விடச் சிறந்ததாகும். நிர்க்குணம், சகுணம், அருவம், உருவம் ஒன்றாயமைந்த பரமசிவனே முருகன் வடிவில் அருள் புரிகின்றார். சத்யோஜாதம், தற்புருசம், வாமதேவம், அகோரம், ஈசானம், அதோமுகம், எனும் ஆறுமுகங்கள் கொண்ட பரமசிவனிடத்தில் தோன்றி, வடிவெடுத்து, ஒன்றாயிணைந்து ஆறுமுக மூர்த்தியாகி என்றும் இளைஞனாய்க் காட்சியளிக்கின்றார்.

கார்த்திகை நட்சத்திரங்களின் அதிதேவதைகளும், பராசக்திகளான துர்க்கநாசம் செய்யும் துர்க்கை, செல்வத்தைக் கொடுக்கும் இலக்குமி, வித்தியா பலத்தை அளிக்கும் சரஸ்வதி, ரோகநாசம் செய்யும் ராதை, சுகஜீவனத்தைப் பயக்கும் சாவித்திரி, வீடுபேற்றை அளிக்கும் புவனேஸ்வரி ஆகிய ஆறுசக்திகளின் முலைப் பாலை ஆறு குழந்தைகளின் உருவில் பருகிப் பின்னர் பராசக்தியான பார்வதியின் பரிசத்தால் ஓருருவும் ஆறு உருவங்களும் கொண்ட குழந்தையாக மாறி, அம்பிகையின் அருட்பாலை உண்டு சிவ சத்தியின் ஊர்த்துவ போகமே பிரமானந்தம் என்னும் உண்மையை உலகிற்கு சந்தேகமற விளக்குவது திருமுருகன் சகுன வடிவமே, கந்தனே சச்சிதானந்த வடிவம்.

திருமுருக நாமத்தை (ஓம் சரவணபவ) ஆறு தடவைகளும் உள்ளம் கசிந்து பிரணவத்தைத் தவறாது முன் நிறுத்தி ஓதுபவர்கள் சகல விதமான துன்பங்களிலும் இருந்து நீங்கி சகல விதமான ஐஸ்வரியங்களையும் அடைவார்கள்.

முருகன் ஆறுமுகமான பொருள் எனவும், ஆறுமுகங்கள் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சாயம் ஆகிய ஆறு அகப் பாசனைகளை வென்றவர் எனவும், நியாயம், வைசேடியம், சாங்கியம், யோகம், பூர்வமீம்மாம்சை, உத்தர மீம்மாம்சை ஆகிய ஆறு கிருத்தியங்களை வகிப்பவர் எனவும் லீலை, ஞானம், அபயம், வரதம், துட்ட நிக்கிரகம், சிட்டபரிபாலனம், ஆகிய ஆறு தொழிலதிபதி எனவும், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய ஐந்து தன்மாத்திரைகளையும் அவற்றை அனுபவிக்கும் அந்தக் கரணத்தையும் அடக்கி ஆள்பவர் எனவும், மேலும்,

சைவம், சாக்தம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம், வைஸ்ணவம் ஆகிய மத தத்துவங்களை விளக்கி நிற்பவை எனவும் ச,ர,வ,ண,ப,வ ஆகிய ஆறு எழுத்துக்களும் பீஜங்களை உடையவர் எனவும், சிசை, விஜாகரணம், விருத்தம், சந்தம், சோதிடம், கல்பம் ஆகிய வேதங்களையும் போதிப்பவர் எனவும், ஆகர்ஸணம், மோகனம், தம்பணம், உச்சாடனம், மாரணம் ஆகிய ஆறு பிரயோகங்களை ஆத்ம சுத்தியின் பொருட்டு வெளிப்படுத்தியவர் எனவும் ஆத்மாக்கள் ஆறுக்கும் அதிபதி எனவும் கொள்ளப்படுவர். இன்னும் ஆறு முகங்களும் பல்வேறு விதமான செயற்பாடுகளைச் செய்கின்றன. எனவும் கூறப்பட்டுள்ளது.

திரு முருகனின் பன்னிரு விழிகளும் சத்திய வசனம், வேதாந்த விசாரம், பொறாமையின்மை, அதர்ம வெறுப்பு, தட்ப வெட்பங்களைத் தாங்கும் ஆற்றல், குணமுள்ள இடத்தில் குற்றம் ஏற்காமை,யாகாதிகளைத் தூண்டி நிறைவேற்றுதல், சற்பாத்திரதானத்தை வழங்குதல், இந்திரிய விக்கிரகம் செய்தல், நற் செயல்களைச் செய்யும் தைரியத்தை அருளுதல் ஆகிய அருட் செயற்பாடுகளைச் செய்கின்றன.

பன்னிரு கரங்களும் அடியார்களைப் பிறவிப் பிணியிலிருந்து நீக்குதல், அடியார்களுக்கு அபயமளித்தல், அருணகிரிக்கு அருள் வழங்குதல், செருக்குற்ற நான்முகனை செருக்கடக்குதல், இந்திரனின் செருக்கு நீக்கி மகிடம் சூட்டுதல், வள்ளி நாயகிக்கு மணமாலை சூட்டுதல், தீய சக்திகளை அழிக்க வேல் ஏந்துதல், சேவற்கொடி தாங்குதல், வேதியர் வேள்வியைக் காத்தல், அண்டங்களைப் பரிபாலித்தல், நக்கீரனுக்கு அருள் புரிதல், வறுமைப் பிணியை அடியார்களிடமிருந்து போக்குவதற்கு வாரி வழங்குதல். ஆகிய செயல்களுடன் மேலும் பன்னிரு கரங்களும் வேல், வச்சிரம், துறட்டி, திரிசூலம், கேடயம், வில், சக்கரம், பாசம், அங்குசம் சேவல், மற்ற

இரு கரங்களில் ஒன்று அபயமளிக்கிறது. மேலும், அடியார்களின் துன்பங்கள் நீங்குவதற்காக பல அருட் செல்வங்களைச் செய்கின்றன.

திரு முருகனின் திருவடிகளே சங்கரேகை, பதுமரேகை, கைவல்லியரேகை, சுவர்ணாகர்ஷணரேகை எனும் நான்கு ரேகைகளைக் கொண்டவை.

மயில்வாகனமானது மாயையின் சொரூபம், முக்குணங்களின் உற்பத்தித் தானம் இவ்வாறாக மயிலானதை அடக்கி தன்வசப்படுத்தி ஆள்பவன் முருகன். வேதங்கள் திருமுருகனின் திவ்விய வடிவைப் போதிக்க முடியாமல் வருந்தி, திடமுடன் தவம் செய்து, மயில் ரூபமாகி, முருகனின் சுவடுகளை வணங்கும் பொருட்டு அவர்தம் வாகனமாகி மனோரதத்தை பூர்த்தி செய்து கொண்டதாக ஸ்கந்தோபநிஸத் முதலான புராண நூல்கள் மூலம் அறியக் கிடைக்கிறது. இதே கருத்தினை விசுவாச முனிவரால் எழுதப்பட்ட கந்தபுராணத்திலும் காணப்படுவதாக அறிகின்றோம். முருக சக்தியானது தேவயானையை இச்சா சக்கியாகவும், வள்ளி நாயகியை கிரியா சக்தியாகவும் முருகனின் வேலானது ஞான சக்தியாகவும் திருமுருகன் சந்நிதியில் செயலாற்றுகின்றன.

இத்தகைய கருணை வடிவம் கொண்ட திருமுருகனை கச்சியப்ப சிவாச்சாரியார்

1) அருவமும் உருவமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணை கூர் முகங்களாறும் கரங்கள்பன் னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய.

2) ஊரியான் குணங்குறியிலான் செயலிலான் உரைக்கும்
பேரிலான் ஒரு முன்னிலான் பின்னிலான் பிறிதோர்
சாரிலான் வரல் போக்கிலான் மேலிலான் தனக்கு
நேரியான் உயிர்க் கடவுளாய் என்னுள்ளே நின்றான்.

3) மறைகளின் முடிவாய் வாக்கால் மனத்தால் அளக்கொணாமல்
நிறைவுடன் யாண்டுமாகி நின்றிடும் நிமல மூர்த்தி
ஆறுமுக உருவாய்த் தோன்றி அருளோடு சரவணத்தின்
வெறிகமழ் கமலப்போதின் வீற்றிருந்தருளினாளே.

4) காலமாய்க் காலமின்றி கருமமாய்க் கருமமின்றி
கோலமாய்க் கோலமின்றி குணங்களாய்க் குணங்களின்றி
ஞாலமாய் ஞாலமின்றி அநாதியாய் நுங்கட்கெல்லாம்
மூலமாய் இருந்த வள்ளல் மூவிருமுகங் கொண்டுற்றான்.

என்னும் பாடல்களால் விளக்கிக் கூறியுள்ளார்.

கருணையே வடிவான கோலத்தை,

கோலமா மஞ்ஞை தன்னிற் குலவிய குமரன் தன்னைப்
பாலனென் றிருந்தேன் அந்நாள் பரிசிலை உணர்ந் திலேன்யான்
மாலயன் தனக்கும் ஏனைவா னவர்தமக்கும் யார்க்கும்
மூலகாரணமாய் நின்ற மூர்த்தி இம்மூர்த்தியன்றோ.

"ஆயிரங் கோடி காமர் அழகெலாம் திரண்டொன்றாகி
மேயின எனினும் செவ்வேள் விமலமாம் சரணந்தன்னில்
தூயநல் லெழிலுக் காற்றா தென்றிடின் இணையதொல்லோன்
மாயிரு வடிவிற் கெல்லாம் உவமையார் வகுக்கவல்லார்." கண்டு

சூரபதுமன் வியந்து நின்றான்.

திரு முருகப் பெருமானானவர் சண்டாளர், புலையர், ஆதாரமற்றவர், பாவிகள், பாதகர்கள் ஆகியோரையும் தடுத்தாற்கொண்டு அருள் புரிபவர். தீரா நோய்களை தீர்த்தருளும் அருமருந்து சகல பூதப்ரேத பைசாசங்களையும் விரட்டியடிக்கும் மந்திரமணி, பேசாதவர்களைப் பேசவைக்கும் மூலிகை, கண்ணில்லாதவர்களுக்கு கண் கொடுத்தருளும் ஞானத் தீபம். குன்ம நோயினால் பீடிக்கப்பட்ட ஆதிசங்கரர் தம் நோய் நீக்க சுப்பிரமணிய புஜாங்கம் பாட வைத்தார். காமாந்த காரனாய்த் திரிந்த அருணகிரி நாதரை ஆட்கொண்டு திருப்புகழ் பாட வைத்தார். ஊமையாக இருந்த குமரகுருபரரை வாய் பேச வைத்து கந்தர் கலிவெண்பாவைப் பாடவைத்தார். சூலை நோய்க்கு ஆழாகி வருத்தமடைந்த பகழி கூத்தர் என்னும் புலவர் வைஸ்ணவராக இருந்த போதும் அவர்தம் நோய் தீர்த்தும் பிள்ளைத் தமிழ் பாட வைத்த பெருந்தகை கடைச்சங்க தமிழ் புலவர் நக்கீரர். பூதத்தினால் சிறைப்பட்டு மிக வருந்தி திருமுருகனைத் துதித்து திருமுருகாற்றுப்படை பாடி தாமும் மற்றும் 999 பேரும் சிறையில் இருந்து விடுபட அருள் புரிந்தவர். அண்மைக் காலத்தில் வாழ்ந்து வழிகாட்டிய பாம்பன் சுவாமிகள், யோக சுவாமிகள் ஆகிய அரும் பெரியார்கள் திருமுருகன் மீது தீராத காதல் கொண்டு பல பாடல்களைப் பாடி உள்ளனர்.

திரு முருகனை எல்லோரும் இலகுவாக துதிக்க உகந்த மந்திரம் "சரவணபவ" என உச்சாடனம் செய்து உள்ளத் தூய்மையோடு இருந்தால் அவனிடம் வேண்டியதைப் பெற்றுக் கொள்ளலாம். என்பது பெரியோர் வாக்கு.

சரவணபவ என்பதில் "ச" என்பது குபேரசம்பத்தையும், "ர" என்பது பாவங்களைப் போக்கி வித்தையையும்,ஞானத்தையும் ஈந்திடும் "வ" என்பது போக மோகப் பிராப்தியையும், தைரியத்தையும் அழிக்கும் "ண" என்பது மனத்தை பக்குவப்படுத்துவதோடு உன்னத நிலையையும் தரும் என்றும், மேலும் (ச) வசிய சக்தியையும், (ர) ஆகர்ஸண சக்தியையும், (வ) உலகத்தை போகிக்கச் செய்யும் வல்லமையும், (ண) பகைவரை வெல்லும் ஆற்றலையும், (ப) உச்சாடன ஆற்றலையும், (வ) தீய சக்திகளை மரணம் செய்யும் ஆற்றலையும் தரவல்லன.

இக் கலியுகத்தில் கலியுக வரதனான திரு முருகனே அடியவர்களின் வழிபாட்டிற்கு உரிய தெய்வமாகும். முருக வழிபாட்டைத் தவிர ஜீவன்கள் சாயுச்சிய பதவியை அடைய வேறு மார்க்கங்கள் எவையும் கூறப்படவில்லை.

## 2. திருக்கை வழக்கம்

இது புகழேந்திப் புலவரால் செய்யப்பட்டது. "திருக்கை" என்பது "அழகிய கை எனவும் தெய்வத்தன்மை பொருந்திய கை" எனவும் பொருள்படும். முருகப்பெருமானுக்குத் துணைவராக வந்தநவவீரர்களாகிய வீரவாகுதேவர் முதலியோர் வழிவந்தவர்களே செங்குந்தக் குலமக்கள் என்பதால் அவர்கள் கை "திருக்கை" எனப்பட்டது. அவர்கள் செய்த அருஞ்செயல்களையும் அக்குல இயல்புகளையும் புகழ்ந்து கூறுவது இந்நூல்.

"பழக்க வழக்கம்" என்பது உலக வழக்கில் உள்ள ஒரு சொல். பழக்கம் என்பது ஒருவர் தன்னுடைய விருப்பம் இன்றியும். பிறர் அருகில் இருப்பதை நோக்காமலும் தானே நடைபெறும் செயலாகும். இது இயற்கையாகவே ஒருவரிடத்தே காணப்படுவது இதனை அனிச்சை செயல் எனவும் கூறுவர். "வழக்கம்" என்பது ஒரு கொள்கை பற்றியோ, மன உறுதி கொண்டோ நாம் மேற்கொண்ட செயலை எந்தநாளும் விடாமல் மேற்கொள்வது செங்குந்தர் தாம் பிறர் பொருட்டு உறுதியுடன்

மேற்கொண்ட செயல்கள் (வழக்கம்) இந்நூலின் கண் சிறப்பித்துக் கூறப்படுகின்றது.

இதன் கண் முருகப்பெருமான் வீரவாகுதேவர் முதலியோர் செய்த செயல்களும் செங்குந்தர்கள் செயல்களாகவே புலவர் அவர்கள் கூறியுள்ளார்.

காப்பு

நேரிசை வெண்பா

சோணாடும் தொண்டைவளத் தொல்நாடும் ஆளுடைச்செவ்
வேணாடும் தம்பியர்கை வீறுரைப்பச் - சோணாடு
காப்பான் பதம்புரப்பான் கைம்மா முகப்படைத்துக்
காப்பான் பதம்புரப்பான் காப்பு.

பொருள்:

சோழநாட்டையும் பழமையான தொண்டை நாட்டையும் தன் ஆளுகைக்குள் உடைய செவ்வேள் என்னும் முருகப்பெருமான் விரும்பும் தம்பியர்களாகிய செங்குந்தர்களுடைய கைகளின் தனிச்சிறப்பை எடுத்து உரைப்பதற்கு தேவலோகத்தைக் காக்கும் இந்திரனுடைய பதவியை நிலைநிறுத்திக் காப்பவருமான விநாயகப் பெருமானுடைய திருவடிகளே எனக்குப் பாதுகாவலாகும்.

## கலிவெண்பா

தேவர்களின் முறையீட்டினைக் கேட்ட கைலை வாசனாகிய இறைவன் சூரபதுமனை அழிப்பதற்காக முருகப்பெருமானையும், வீரவாகு தேவர் முதலிய நவவீரர்களையும் தோற்றுவித்தது முதலிய கந்தபுராணச் செய்திகளும் பிறவும் கூறப்படுகின்றன.

நூல்

1. திருமால்முன் னாயபல தேவர் அவுண் சூரால்
உருமாறிக் கைலைவரை உற்றே.

பொருள்:

திருமால், பிரமன், இந்திரன் முதலிய தேவர்கள் அனைவரும் அவுணனாகிய சூரபதுமனால் பட்ட துன்பத்தால் மிகவும் வருத்தமடைந்து

இளைத்து உருவம் வேறுபட்டு, சிவபெருமான் வாழுகின்ற கைலைக்குச் சென்று.

- பெருமாரி

2. பெய்யலென ஓலமிடப் பெம்மான் இரங்கிநுதல்
செய்யவிழி ஆறு திறந்தருளி

பொருள்:

இறைவனிடம் மழைபெய்வது போலக் கூக்குரலிட்டுத் தம் குறைகளைச் சொல்ல, அப்பெருமான் கருணையுடன் தாம் ஆறுமுகம் உடையவனாகி அந்த ஆறு முகங்களிலும் உள்ள சிவந்த நெற்றிக்கண்களைத் திறந்தருளி. (ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவன், சத்தியோ ஜாதம் ) என்னும் ஐந்து முகங்களுடன் "அதோமுகம்" என்ற ஆறாவது திருமுகத்தையும் கொண்டனர் என்பது தோன்ற ஆறும் என்றார்.

- வெய்ய

3. அனற்பொறியால் ஆறா னனைத் தர அக்
கனற்பொறிக்கஞ் சுற்றெழுந்த கௌரி

பொருள்:

வெப்பம் மிகுந்த நெருப்புப் பொறிகளால் ஆறுமுகனைத் தோற்றுவித்தருள அந்த நெருப்புப் பொறிகளின் வெம்மைக்காற்றாது எழுந்து ஓடிய உமையம்மை.

(ஆனனம் - முகம் ; ஆறு – ஆனன் ஆறுமுகக் கடவுள்)

- புனைச்சிலம்பின்

4. ஒன்பான் மணி சிதற ஒன்பான் உமைஉருக்கள்
அன்பாய் அவற்றூ(டு) அவதரித்தே.

பொருள்:

கால்களில் அணிந்திருந்த அழகிய சிலம்புகள் மோதியதனால் அவை உடைந்து அவற்றினின்றும் முத்து, பவளம், மாணிக்கம் முதலிய நவமணிகள் சிந்த, அம்மணிகளில் உமாதேவியின் சாயல் பொருந்தியதினால் அவையில் இருந்து ஒன்பது பெண்கள் தோன்றி (புனை – பொருத்து)

- இன்பாய் அவ்

5. அண்ணல் அருள்பெறலும் அவ்வவர்பால் நந்திகணப்
பண்ணவர்சூ லாகஉமை பார்த்துறுக்கி

பொருள்:

சிவபெருமானுடைய திருநோக்கால் அருள்பெற்றவுடன் சிவகணத்தவர் அப்பெண்களின் கருவிற் சென்று சேர, அதைக் கண்ட உமாதேவியார் கோபித்து.

(பண்ணவர் - தேவர்,உறுக்கி – கோபித்து)

- நண்ணுறுசூல்

6. தோற்றா வகைசபிக்கத் தோமில் நவ சக்திகள் நாம்
ஏற்றாராய் வேர்ப்ப அதி லேஇலக்கர்

பொருள்:

"நீவீர் கருவுயிர்க்காமல் பலநாள் இருக்கக் கடவீர்" எனச் சபிக்க, அச்சாபத்தை ஏற்ற குற்றமற்ற அவ்வொன்பது மகளிரும் அச்சம் கொண்டதனால் உடல் வியர்க்க, அவ்வியர்வையிலிருந்து ஓரிலட்சம் வீரர்கள்.

(தோமில் - குற்றமற்ற, நாம் ஏற்றாராய் - அச்சம் கொண்டவர்களாய்)

- ஆற்றலொடு

7. பொன்னுடையும் வாகுமுறப் போந்(து) அமலற் போற்றிஅவன்
மன்னுடைய தொண்டில் வயங்க.

பொருள்:

வீரம்மிக்கவர்களாய் பொன்னாடை தரித்துக் கையில் வாளுடன் தோன்றிச் சிவபெருமானை வணங்கி அவன் கட்டளைப்படி முருகப் பெருமானுக்குரிய தொண்டுகள் செய்து நிற்க

("மகன்" என்பது இடை குறைந்து 'மன்' என நின்றது)

- மினார் - துன்னுறுசூல்

8. பன்னாளும் ஆற்றாராய்ப் பாண்டரங்க னால்பரைதன்
இன்னார் அருள்பெறலும், யோகுவிடுத்(து).

பொருள்:

மின்னல் கொடிபோன்ற அப்பெண்கள், நீண்டநாட்கள் கருவினைச் சுமக்கமாட்டாராய் வருந்த சிவபெருமான் கூறியதனால் இறைவி அவர்களுக்கருள்புரிய, கருவிலே யோகத்திலிருந்த அச் சிவகணத்தவர் யோகம் நீங்கி.

9. - அன்னார்
நிறங்கொடுபொன் ஆடையொடு நீளாயுள் மீசைத்
திறங்கொடு (ஒ)ருங் கேஒன்ப தின்மர்.

பொருள்:

தங்களைக் கருவில் தாங்கிய தாயாரின் நிறங்களை தாம் பெற்று நீடிய வாள்நாளும் பொன்னாடையும் மீசையும் ஆற்றலும் பெற்று வீரவாகு முதலிய ஒன்பதின்மர் (நவவீரர்)

10. - அறங்குலவப்
பண்டுமால் உந்திப் பதுமத் தவதரித்த
எண்திருக் காணான்போல் இனிதுதித்து.

பொருள்:

தருமம் செழிக்க முன்னொருகாலத்தில் திருமாலின் உந்திக்கமலத்தில் தோன்றிய பிரமதேவன்போல் (மானிடர் தோற்றம் போலன்றி) அப்பெண்களின் உந்திவழியே ஒருங்கே நன்கு அவதரித்து.

11. - தண்டைபுனை
அம்மையப்பர் தாள்தொழலும் ஆங்கவர்மற்(று) ஈங்கு இவர்தம்
செம்மை அறி(வு) ஆற்றல்இசை சேர்மானக் - கொம்மையினக்.

பொருள்:

வீரக்கழலணிந்த அம்மையப்பராகிய சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கியவுடன் அப்பெருமான் இவர்களுடைய அறிவு, திறமை,புகழ் மானம் இவற்றின் பெருமைகளை.
(கொம்மை – பெருமை)

12. கண்(டு) இவரே கைக்கோள் கலனுடையார் என்(று) அமலைக்கு
அண்டர்பிரான் ஓத அவன் அக்கணத்தே

பொருள்:

"இவர்களே படைக்கலன்களைக் கைக்கொள்ளுதற்குரியவர்" என்று உமாதேவியிடம் சிவபெருமான் எடுத்துரைக்க அப்பெருமாட்டி அப்பொழுதே

(அமலை - இறைவி, அண்டர்பிரான் - தேவர்தலைவன்)

- மண்டு

13. நெடும்போர் களைகுந்தம் நீட்ட அவனும்
கடும்போர் களைவாள்கை தந்து.

பொருள்:

நெருங்கிய போரை வெல்லுகின்ற செங்குந்தப்படையை எடுத்துக் கொடுக்க இறைவனும் பகையைப் போக்குகின்ற வாளாயுதத்தைத்தந்து. (அவர்கள் செய்யவேண்டிய பணிகளைக் கூறி அனுப்பினார்கள்)

<u>நவவீரர் செயல்கள்</u>

14. வித்தகனாம் யாழ்முனிசெய் வேள்வி வருந்தகரைப்
பற்றிமுனோர்க்(கு) ஊர்தியெனப் பண்ணும்கை

பொருள்:

இசையில் வல்ல நாரதமுனிவர் செய்த யாகத்தில் தோன்றிய ஆட்டினைப் பிடித்துவந்து தங்கள் முன்னவனாகிய முருகனுக்கு வாகனமாக ஆக்கிய கை.

15. நாரசிங்கன் போன்றெண்ணில் நாகரைவெந் கண்டடக்கும்
வீரசிங்கன் ஆருயிரை வீட்டுங்கை

பொருள்:

நரசிங்கவடிவங்கொண்ட திருமால்போல, தேவர்களை அடக்கிய சூரபதுமனுடைய சேனைத்தலைவனும் இலங்கையைக் காவல் செய் திருந்தவனுமாகிய வீரசிங்கனுடைய உயிரைப் போக்கிய கை. (இது வீரசிங்கனை வீரவாகுதேவர் கொன்ற வரலாறு)

- கானோர்க்கும்

16. எண்இழியக் கோலோச்சும் ஏந்தல்சூ ரன்சபையில்
விண்இழிசிங் காதனத்தில் வீறும்கை

பொருள்:

காட்டில் தவம் செய்யும் முனிவர்களும் தம் எண்ணத்தில் தாழ்வு படுமாறு கொடுங்கோல் செலுத்தும் சூரபதுமன் சபையில் கண்டோர் வியக்குமாறு வானிலிருந்து ஒளிமயமாக வந்த அரியணையில் சிறப்புடன் வீற்றிருந்த கை.

- சிந்துவினில்

17. வாகா ரிரணியனை வாட்டித் துரத்தி உக்ர
மாகாளி யைத்தொண்டில் வைத்திடுங்கை

பொருள்:

போர்க்களத்தில் எதிர்த்துப் போரிட்ட சூரபதுமன் மகனான அழகு மிக்க இரணியனைத் துன்புறுத்திக் கடலில் ஒளிந்து கொள்ளுமாறு செய்து அவன் வழிபட்ட கோவமுடைய காளிதேவியைத் தனக்கு ஏவலாகத் தொண்டு செய்யுமாறு ஆக்கிக் கொண்ட கை.

(சிந்து - கடல், வாகார் - அழகுமிகுந்த, உக்ர - கோபமுடைய)

- தீகால்

18. முகனனுப்ப வந்தஐயை முன்னேத்தி நிற்ப
இகலவளை வாட்டிவைத்த ஏண்கை.

பொருள்:

அக்கினி முகன் கட்டளைப்படி போரிடவந்த துர்க்கையை அடக்கி அவள் தனக்கு முன்னே அடங்கிப் புகழ்ந்து நிற்குமாறுசெய்து மாறுபாடு கொண்ட அவ்வக்கினி முகனைத் துன்புறுத்தி அழித்த பெருமையுடைய கை.

(தீகால்முகன் - நெருப்பை உமிழும் அக்கினி முகன், ஐயை - துர்க்கை, ஏண்- பெருமை)

- வானை

19. வசாங்கமென ஆக்கி மனுகுலத்தும் ஓங்கித்
தசாங்கம் இருவகையும் சார்கை

பொருள்:

வானுலகத்தைத் தம்வசப்படுத்திச் சோழர்குலத்திலும் புகழ்பெற்று ஓங்கி அதனால் இருவகைத் தசங்களையும் பெற்றிருக்கின்ற கை.

( இருவகை தசங்கள் என்பது ஒன்று வானுலகில் தேவர்களாக இருந்த போது பெற்ற சிறப்பு, மற்றொன்று சோழர்குலத்துத் தோன்றிப் புவியில் வாழ்ந்த போது பெற்ற சிறப்பு)

\- நிசாங்கர்

20. பரவும் வடவனத்தெம் பண்ணவனோ டாடும்
உரவையைப்பொன் தாளம்உரி ஒண்கை

பொருள்:

மெய்யடியார்கள் வழிபடுகின்ற திருவாலங்காட்டு இறைவனுடன் கருவம் கொண்டு நடனமாடிய காளியின் கையில் இருந்த பொற்றாளத்தைப் பறித்துக்கொண்ட ஒளி பெற்றகை.

(நிசாங்கர் - மெய்யடியார்கள், வடவனம் - திருவாலங்காடு, உரவை - காளி)

\- வேழம்

21. தரணியில்பல் சூழ்கலிங்கம் சாந்தமரேற் றான்றோர்
பரணிசொலச் சொற்றொழித்தல் பண்கை

பொருள்:

யானைப்படை அதிகம் உள்ள கலிங்க நாட்டின் மீது பொருது வெற்றிபெற்று, சான்றோர் பரணிபாடுமாறு செய்த பண்புடைய கை.

(இப்பரணி ஒட்டக்கூத்தரால் பாடப்பட்டது)

\- மாதவர்பால்

22. ஒரெண்பான் புண்ணியங்கள் ஓயா(து) இயற்றி அமர்க்(கு)
ஈரொன்பான் ஆயுதங்கள் ஏந்துறுகை

பொருள்:

பெருந்தவத்தை உடைய தவசிகளிடத்தில் "பெரியோரை எதிர்கொளல் பணிதல், ஆசனத்திருத்துதல்,திருவடிவிளக்கல், மலர்தூவிப்போற்றல், நறும் புகைகாட்டல், ஆரத்திஎடுத்தல், தோத்திரம் செய்தல், அமுதளித்தல்" ஆகிய ஒன்பது வகைப் புண்ணியங்களைச் செய்து போர்மேற்செல்லும் காலத்துப் பதினெட்டுவகைப் போர்க்கருவிகளையும் ஏந்திச் செல்லுகின்ற வலிமை பெற்ற கை.

\- பாதகம்நேர்

23. வெய்யதொழி லாம்உழுதல் வேண்டா(து) அறம்வளர்க்கும்
துய்யதொழி லாம்நெய்தல் தோயும்கை.

பொருள்:

பாதகத்தை ஏற்றுக்கொள்கின்ற கொடியதொழிலாகிய உழவுத்தொழிலை விரும்பாமல், தருமத்தை வளர்கின்ற தூய தொழிலாகிய நெசவுத்தொழிலில் தோய்ந்திருக்கும் கை.(உழவுத்தொழிலில் சில உயிர்கள் அழிதற்கிடனா உள்ளமையால் அதனை "வெய்ய தொழில்" என்று மனிதர்களின் ~~மரண~~மானத்தைக்காக்க நெசவுத்தொழில் உதவுதலின் அதனைத் "துய்ய தொழில்" என்று கூறியுள்ளார்)

\- நியாத(ம்)உறு

24. நற்குணம்ஓர் பத்தினையும் நாடிமற்றோர் பத்தாகும்
துற்குணத்தை நாடாத தொன்மைக்கை

பொருள்:

நியதியுடைய பத்து நற்குணங்களையும் ஆராய்ந்து கைக்கொண்டு தீயகுணங்கள் பத்தினை மனதிலும் கருதிப்பார்க்காத பழமையான கை.

1. நற்குணங்கள் பத்தாவன-

வாய்மை, நல்லனகூறல், இன்சொல், பயனுளமொழிதல் என மொழிநலம் நான்கு.

கோயில்வலம் வரல், தவம்புரிதல், தானம்செய்தல் என மெய் நலம் மூன்று.

அருளுடைமை, அவாஅறுத்தல், தவம்விரும்பல் என மனநலம் மூன்று.

அருளுடைமை, அவாஅறுத்தல், தவம்விரும்பல் என மனநலம் மூன்று
ஆகப் பத்து

2. தீக்குணம் பத்தாவன -

பொய்மை, கோள்சொல்லல், கடுஞ்சொல், பயனிலமொழிதல் என மொழிக்குற்றம் நான்கு

களவு, கொலை, பயனில செய்தல் என மெய்க்குற்றம் மூன்று

பகைமை, காமம், பேரவா என மனக்குற்றம் மூன்று

- விண்டலர்மேன்

25. மைக்கோள ரும்வாழி வாழிஎன எத்திசைக்கும்
கைக்கோளர் அற்புதப்பூங் கை

பொருள்:

திருமாலும் பிரமதேவனும் மற்றும் தேவர்கள் அனைவரும் "வாழ்க வாழ்க" என்று போற்றிப் புகழும் ஒழுக்கத்தைக்கைக் கொண்டவர்களாகிய (செங்குந்தர்களுடைய) கைக்கோளருடைய அற்புதமான இனிய கைகள் இச்சிறப்புக்களை எல்லாம் உடையனவாகும்.

- நெய்யாடிக்

26. கங்கம் உமிழ்கணைகள் கைக்கொண்(டு) அமரில்வைகும்
வங்க அரையனுயிர் வாட்டுங்கை.

பொருள்:

நெய்யில் தோய்ந்து தீப்பொறிகளைச் சிந்துகின்ற அம்புகளைக் கொண்டு போரில் ஈடுபட்ட வங்கதேசத்து அரசனுடைய உயிரை வதைத்த கை.

(கங்கம் - தீப்பொறி, அரையன் - அரசன்)

இருபத்தைந்தாவது கண்ணியில் வந்த "அற்புதப் பூங்கை" என்னும் தொடரே திருக்கை வழக்கம் என்னும் இந்நூலுக்கு எழுவாயாகவும் முன் உள்ள கை என்பன பலவும் பயனிலைகளாகவும் அமைகின்றன.

"திருக்கை வழக்கம்" என்னும் இந்நூல் ஒட்டக்கூத்தர் தலைமையின்கீழ் உறந்தையில் அரங்கேறியது எனவும் அச்சபையில் இருந்த ஔவையார்

"என்றும் பெருங்காட்சி யென்றும் பெருங்கேள்வி
என்றும் பெருமொழிமற் றென்றும் பெருவினையே
என்றாலிக் கைக்கோள்கைக் கேனோர் நூலானாலும்
நன்றீது நன்றீது நன்று"

என்று புகழ்ந்திருப்பது காணக்கூடியதாக உள்ளது.

# 3. கலித்துறை மாலை

இது நாகை முத்துக்குமார தேசிகரால் இயற்றப்பட்டது "கலித்துறை" என்பது கலிப்பாவிற்கு இனமாக வருவதொரு பாவினம், இது ஒவ்வோர் அடியிலும் ஐந்து சீர்களைப் பெற்றுவரும். இவ்வினத்தில் முதல் நான்கு சீர்கள் வெண்பா இலக்கணத்துடனும் ஐந்தாவது சீர் விளங்காய்ச் சீராகவும் வந்து எழுத்தளவு பெறுவது "கட்டளைக் கலித்துறை" எனப்படும். கலித்துறைப்பாடல் எழுத்தெண்ணிப்பாடுவது. பாட்டு எழுத்தளவு நேரிசையில் தொடங்கினால் ஓரடியில் ஒற்றொழித்துப் பதினாறு, நிரையசையில் தொடங்கினால் ஓரடியில் ஒற்றொழித்துப் பதினேழு; நான்கடியாய் வந்து ஈற்றில் ஏகாரம் பெறும்

"அடியடி தோறும் ஐஞ்சீராகி
முதலொரு நான்கும் வெண்டளை பிழையாக்
கடையொரு சீரும் விளங்கா யாகி
நேர்பதி னாறே நிரைபதி னேழென் (று)
ஓதினார் கலித்துறை ஓரடிக் கெழுத்தே"

## சிறப்புப்பாயிரம்

### விநாயகர்

பூராய மாம்கவி நான்கையும் ஓர்ந்த புலவர்செவிக்(கு)
ஆரா அமுத மெனச்சோழ மண்டல வாணர்க்குச்சொல்
நேரான மாலைக் கொருவிக் கினமுமென் நெஞ்சகத்தே
வாராமற் கா:கச்சி வாழ்விக டச்சகர் வாரணமே.

பொழிப்புரை:

காஞ்சியம்பதியில் வாழும் விகடசக்கர விநாயகப் பெருமானே! அரிய உண்மைகளைக் கூறும் நற்கவிகளையும் உணர்ந்த கவிவாணர்களுடைய செவிக்குத் தெவிட்டாத அமுதம் போல சோழமண்டலத்தில் வாழ்பவர்களாகிய செங்குந்தர்கள் மீது பாடப்படும் இனிய "கலித்துறை மாலை" என்னும் நூலை இயற்றுவதற்கு எந்த இடையூறும் வராமல் என் மனதுள் நின்று காத்தருள்வாயாக (பூராயம் - அறிதற்கரிய உண்மை, ஓர்ந்த - உணர்ந்து அறிந்து, ஆரா - நிரம்பாத, தெவிட்டாத)

ஒட்டக்கூத்தர்

கல்விக் கரசு கவிராச சிங்கம், கலைச் சலதி
வில்விக்கும் வாட்கை அபயர்சஞ் சீவி, விமலமுத்தி
புல்விக்கும் ஆகமப் பொக்கசம், வேதப் புயல், கமலச்
செல்விக்குச் சேய்ஒட்டக் கூத்த னல்லாற்புவி செப்பரிதே.

பொழிப்புரை:

கல்விகற்றவர்களுக்கு அரசாகவும் கவிஞர்களாகிய யானைகட்கு அரச சிங்கமாகவும், கலைகளில் கடலாகவும் ஒளியை உண்டாக்கும் வாளைக் கையில் தரித்த சோழர்களுக்குச் சஞ்சீவி மருந்தாகவும், உயர்ந்த மோட்சத்தை அடைவிக்கும் ஆகமக் கருவூலமாகவும், வேதங்களின் மேகமாகவும் "கமலச் செல்வி" எனப்படும், சரஸ்வதிக்குப் புதல்வராகவும் உள்ள ஒட்டக்கூத்தரைத் தவிர வேறுயாரையும் இவ்வுலகம் புகழ்ந்து கூற இயலாது.

(சலதி - கடல், வில்விக்கும் - ஒளி உண்டாக்கும், புல்விக்கும் - சேர்க்கும், இஃது எதுகை நோக்கி "புல்விக்கும்" என வந்தது)

நூல்

1. காராரு மேனித்திருமால் மருகர், இக்காசினியில்
ஏராருங் கச்சி யிடைமா வடியி லிருந்துலகாள்
சூராதி சூரர் சுகந்தமுப் தாதும் துலங்குகின்ற
சீரார் கடம்பணி தாரார்திண் மார்பினர் செங்குந்தரே

பொழிப்புரை:

நல்ல மணமும் தேனும் பொருந்தி இருக்கின்ற சிறப்புடைய கடப்ப மாலையை அணிந்த வலிய மார்பை உடைய செங்குந்தர்களாகிய இவர்கள் கரிய திருமேனியுடைய திருமாலுக்கு மருகரானவர்கள். இந்த உலகத்தில் அழகு மிகுந்த திருநகரமாகிய கச்சியம்பதியில் மாவடியின் கீழிருந்து நீதிசெலுத்தி உலகத்தை ஆட்சி செய்கின்ற மிக்கச்சூரத்தன்மை உடையவர்கள்.

(ஏர் - அழகு, கந்தம் - மணம், சுகந்தம் - நறுமணம்)

2. பூமா துறைமணி மார்பற்கும், வெண்கஞ்சப் போதிலுறை
நாமாது கேள்வற்கும் நற்சசி காந்தன்முன் னாகருக்கும்
தாமாதி யாம்தந்தை போலும் முதலியர் தண்டலைப்பூந்
தோமா உருச்செறி கச்சியி லுச்சிதச் செங்குந்தரே.

பொழிப்புரை:

சோலைகள் சூழ்ந்ததும் வேதம் இனிய மாமர உருவாய் உள்ளதுமான கச்சியில் உள்ள உயர்ந்த இச் செங்குந்தர்கள் திருமகள் தங்கிய அழகிய மார்பினை உடைய திருமாலுக்கும் வெண்டாமரை மலரில் வாழும் கலைமகள் தலைவனான பிரமனுக்கும் இந்திராணி கணவனான தேவேந்திரன் முதலிய வானவர்களுக்கும் முதல்வராகிய "தந்தை" எனப்படும் சிவபெருமானைப் போன்ற தலைவர்களாவார்கள். (சிவபெருமானுக்கு நிகரான பெருமை உடையவர்கள் செங்குந்தர்கள் என்பதால், முதலியர் எனச் சொல்லப்படுகின்றனர்.)

(வெண்கஞ்சம் - வெண்டாமரை, நாமது - கலைமகள்)

3. மெய்யுளுக் காதநன் னாவைப் படைத்தவர் மெய்யிற்சற்றும்
மையுளுக் காநமற் கோலைவிட்டோர், வெற்றி வாள்கொடுச்சி
கொய்யுளுக் காவண மென்றே கவியொட்டக் கூத்தன் சொன்ன
செய்யுளுக் காச்சிரப் பாவாடை யிட்டவர் செங்குந்தரே.

பொழிப்புரை:

உண்மை பேசுவதில்தளராத நாவுடையவர்களும், நடுவுநிலைமையில் இருந்து பிறழ்தலாகிய குற்றம் இல்லாத எமதருமனுக்கு (பிழையைச் சுட்டிக்காட்டி) ஓலை விட்டவர்களும் வெற்றி பொருந்திய வாளைக் கொண்டு தம்தலையைச் சிறிதும் தயங்காமல் வெட்டி, ஒட்டக்கூத்தரிடம் செய்யுள் பெறும் பொருட்டு உதிரப்பாவாடை இட்டவர்களும். இச் செங்குந்தவர்களேயாவர். "ஒருஇலக்கியம் படைப்பதற்காக தம்தலையை வெட்டிக்கொடுத்த பெருமைக்குரியவர்கள்".

(உளுக்காத - தளர்ச்சி இல்லாத, கொய் - வெட்டுதல்)

4. மேயசெம் பாக்கம், நெற்குன்றம், படப்பை, வியன்புவனை
நேயநா கேச்சுரம், மானாம்பதி, சண்பைநீடகரம்
தூயநன் னாகை, முன் மாப்பிளைக் குப்பம் சீர்சேர் கமலை
சீயபுரம் சே ரலமாதி நாட்டினர் செங்குந்தரே

பொழிப்புரை:

வளம் பொருந்திய செம்பாக்கம், நெற்குன்றம், படப்பை புவனகிரி, திருநாகேஸ்வரம், மானாம்பதி, சீர்காழி, அகரம், நாகப்பட்டினம் மாப்பிள்ளைக் குப்பம் சிறப்புக்களுடைய திருவாரூர் (சோழ) சிங்கபுரம், சேரநாடு முதலிய 72 நாடுகளுக்கு உரிமை உடையவர்கள் இச் செங்குந்தவர்களாவார்கள்.

(கமலை - திருவாரூர், சேரலம் - சேரலர் நாடு (சேரநாடு))

5. பாவிக் குறும்பருக் கும்பழு வூரண்முன் பன்னிருவர்
மேவிக் குளத்துற்ற கம்பத்தி லேறிஊன் வீசிக்கொண்டே
ஆவிக் கிறுதிசெய் யாமல்வல் லானை அடக்கியபின்
தேவிக்கு மாங்க லியப்பிச்சை யிட்டவர் செங்குந்தரே

பொழிப்புரை:

பாவம் செய்யும் குறும்பர்களை அழிக்கின்ற பழுவூரான் முதலிய பன்னிரண்டு (செங்குந்த) வீரர்கள். (கொடியவனான) வல்லான் இருக்கும் இடம் சென்று அவன் வீரநாராயண புரத்து ஏரியில் கம்பத்தின் மீது கட்டியிருந்த கயிற்றில் ஏறி நீர் வாழ் முதலைகள் தங்களைத் தாக்காதிருப்பதற்கு அவற்றிற்கு உணவிட்டுக் கொண்டே சென்று அவ்வல்லானை அழிக்காமல் அவனை அடக்கி அவன் மனைவி வேண்டிக்கொள்ள அவளுக்கு மாங்கல்யப் பிச்சை கொடுத்துக் காப்பாற்றியவர்கள் இச் செங்குந்தர்களாவார்கள்.

6. குக்குக் குருவெனக் கூகைகள் பாடக் குறுங்குறளி
நக்குச் சிரங்கோட்டி நின்றாட வெட்டி நடுச்சமரிற்
புக்குக் கொடுஞ்சிங்க மாமுகன் பல்சிரம் போழ்ந்துடலச்
செக்குக் கொருசிரம் வைத்தொழித் திட்டவர் செங்குந்தரே

பொழிப்புரை:

போர்க்களத்தில் கூகைகள் "குக்குக் குகு" என்று ஒலியெழுப்பி மகிழவும், குறுகிய உருவத்தை உடைய பூதங்கள் சிரித்து மகிழ்ந்து தலையை அசைத்து ஆடவும் போர்க்களத்தின் இடையிலே சென்று கொடிய சிங்கமுகாசூரனுடைய ஆயிரம் தலைகளில் ஒன்றை மட்டும் அவனுடைய செக்குப்போன்ற உடம்பிலே நிற்க விட்டு வைத்து மற்றத் தலைகளை வெட்டிப்பிளந்து ஒழித்தவர்கள் இச் செங்குந்தவராவர்.
(கூகை - கோட்டான், குறளி - பூதம், போழ்ந்து - பிளந்து)

7. ஒப்புயர் வற்ற கயிலாய வெற்பில்வல் லோங்கவுணர்
துப்பற ஆறு முகனோ டுதித்துப்பின் தொல்லுலகின்
வெப்பற வெய்யோன் குலத்திவர்ந் தோங்கிவிற் பன்னர்மிகச்
செப்பு தசாங்கம் இருவகைப் பெற்றவர் செங்குந்தரே.

பொழிப்புரை:

தனக்கு ஒப்பேதும் இல்லாததாகிய கயிலைமலையில் வலிமையினால் உயர்ந்த அவுணர்களினுடைய வலிமை நீங்குமாறு ஆறுமுகப் பெருமானோடு தோன்றிப் பின்னர் நிலவுலகில் கொடுமை நீங்குமாறு சூரியகுலத்தில் தோன்றி உயர்ந்து கல்வி அறிவுடையவர்கள் உயர்த்திச் சொல்லுகின்ற "தசாங்கம்" என்னும் பிரபஞ்சத்தை இரண்டு வகையில் பெற்றவர்கள் செங்குந்தர்கள் ஆவர்.

(துப்பு - வலிமை, வெப்பு - கொடுமை, இவர்ந்து - உயர்ந்து, தசாங்கம் - அரசர்க்குரிய ஆறு, மலை, நாடு, நகர், மாலை,குதிரை, யானை, முரசு, கொடி, செங்கோல் ஆகிய பத்து உறுப்புக்கள். )

இருவகைத் தசாங்கம் என்பது கைலையில் தோன்றிய ஆறுமுகக்கடவுளுடன் வாழ்ந்த போது கொண்டிருந்த ஒரு தசாங்கம். பூமியில் சோழ மரபில் தோன்றி அங்கு வாழ்ந்த போது பெற்றிருந்தது ஒரு தசாங்கம்.

8. மூவகைத் தீக்கையுள் தந்தை சமயம் முயன்றளிப்பத்
தாவில் விசேட நிருவாணம் தங்குலத் தந்தணர்கைப்
பாவபி டேகத்தர் பன்முறை பாய்ந்து பரிந்தளிப்பத்
தேவரும் மெச்சப்பெற் றோங்கிநிற் பார்களிச் செங்குந்தரே.

பொழிப்புரை:

மூன்று வகையான(சமயம்,விசேடம்,நிருவாணம்)தீட்சைகளில் சமய தீட்சையை தந்தையார் செய்து வைக்க, விசேடம், நிருவாணம் ஆகிய இரண்டையும் தம் குலத்திலுள்ள குருவானவர் நன்கு பல முறை ஆராய்ந்து அன்போடு செய்விக்க அத்தீட்சையைப் பெற்றதனால் அவர்களாலும் புகழ்பெற்று உயர்ந்து நிற்பவர்கள் இச் செங்குந்தர்களாவர்.

(தாஇல் - கெடுதல் இல்லாத, பா - பரந்துபட்ட, அபிடேகத்தர் - ஆசாரிய அபிடேகம் பெற்ற தேசிகர், பரிந்து - அன்புகொண்டு)

9. அப்பணி வேணியர், ஆலால கண்டர் அன்பர்க்கெளியர்
ஒப்புயர் வற்றவர் தம்சிறு பாலரென் றொண்கவிகள்
தப்பில் புராணம் பரணி யுலா பிள்ளைத்தமிழ்முன்
செப்பும் பிரபந்தம் எண்ணில பெற்றவர் செங்குந்தரே

பொழிப்புரை:

கங்கையைத் தாங்கிய சடையை உடையவரும் விஷத்தைக் கழுத்தில் தங்கவைத்தவரும், அன்பர்களுக்கு எளிமையாக அருள் செய்பவரும், தமக்கு இணையும் உயர்வும் இல்லாதவரும் ஆகிய சிவபெருமானுடைய குமாரர்கள் என்று கூறிப் புகழ் பெற்ற பாவலர்கள் எண்ணிலவாகப் பாடிய புராணம் பரணி உலா பிள்ளைத்தமிழ் முதலாகச் சொல்லப்படுகின்ற நூல்களைப் பெற்றவர்கள் செங்குந்தர்களாவர்.

அப்புஅணி - (கங்கை) நீரைத்தலையில் அணிந்த செங்குந்தர்கள் சிவ பெருமானுடைய குமாரர்கள் என்று நூல்கள் கூறுகின்றன என்பது கருத்து.

10. அந்தமும் ஆதியு மில்லான் பணிகொண் டறுமுகன்பால்
வந்தனை யாற்றித் தமைவரப் பெற்ற மனுகுலத்தோன்
சொந்தம தாம்முசுப் பேரரு கேதங்கள் தொல்படைப்போர்
செந்தமிழ் நாவலர் கொண்டாட வைத்தவர் செங்குந்தரே

பொழிப்புரை:

முடிவும் தோற்றமும் இல்லாத சிவபெருமானுக்குரிய பணிவிடைகளை ஏற்றுக்கொண்டு ஆறுமுகனிடத்தில் வணங்கி நின்று தம்குலத்தில் வந்து தோன்றிய மனுகுலத்தரசனை "முசு" என்னும் பெயருக்கருகே தங்களுடைய பழமையான படைக் கருவியாகிய குந்தம் என்னும் பெயரையும் சேர்த்து தமிழ் வல்ல புலவர்கள் எல்லாம் "முசுகுந்தன்" எனக் கொண்டாடுமாறு செய்தவர்கள் இச் செங்குந்தர்களாவர்.

(மனுகுலம் - சோழர்குலம்)

11. நாமா புகல்வ திவர்வீரம்! அம்மம்மா! நான்முகனால்
ஆமா? இதற்குக் கரிகே ரளஇறை அஞ்சவைத்துத்
தாமாகத் தங்குலக் கோதைஇச் சித்தசந் தானமெனும்
தேமாங் கனியைக் கொணர்ந்தளித் தார்கள் இச் செங்குந்தரே

பொழிப்புரை:

இச் செங்குந்தர்களின் வீரத்தை அம்மம்மா பிரமதேவனாலும் எடுத்துச் சொல்ல இயலாது என்றால் நம்மாலா கூற இயலும்? இயலாது கேரள நாட்டு மன்னன் அஞ்சுமாறு போரிட்டு இவர் தம் குலக்கொழுந்தான "சித்திரவல்லி" விரும்பிக்கேட்ட "சந்தான மாங்கனி" என்னும் உயர்ந்த

மாம்பழத்தைக் கொண்டு வந்து கொடுத்ததே இவர்களுடைய வீரத்திற்குச் சான்றாகும்.
(கரி - சாட்சி கேரள இறை - கேரள அரசன்)

12. காவே சுரப்பினும் கார்பெய்தல் பொய்ப்பினும் கடகமலப்
பூவே மலையின் நுனியிடை பூப்பினும் பூதலத்தின்
மாவே ழுடையபெய் யோன்வடக் குந்தெற்கும் மாறினும்மெய்த்
தேவே விலகினும் நாவிலங் காதவர் செங்குந்தரே

பொழிப்புரை:

கற்பக தரு உலோபத்தன்மையை உடையதாயினும் மழை பெய்வது பொய்த்துவிட்டாலும் தேனை உடைய தாமரைப்பூ மலையுச்சியில் பூத்தாலும் ஏழு குதிரைகள் பூட்டிய தேரில் வரும் சூரியன் இவ்வுலகில் வடக்குத் தெற்காக மாறி உதித்து வந்தாலும் தெய்வமே மாறி நின்றாலும் தாம் சொன்ன சொல்லிலிருந்து மாறாதவர்கள் இச்செங்குந்தர்களேயாவார்கள்.

## கலித்துறை மாலை

13. மருவுக்கு நல்ல கடம்பணி மார்பர் நல் வாகையுள்ளோர்
தருவுக்கு நல்ல கொடையுடை யோர்இந்த தாரணியில்
வெருவுக்கு நல்ல கொடுஞ்சூர பன்மனை வெல்லுகின்ற
செருவுக்கு நல்லவர் தேவ சிகாமணிச் செங்குந்தரே

பொழிப்புரை:

நறுமணத்தை விரும்பிக் கடப்ப மாலையை அணிந்த மார்பினை உடையவர்களும் வெற்றி உடையவர்களும் கற்பகதருவுக்கு மேலாக நல்ல கொடை வழங்குபவர்களும் இவ்வுலகில் கொழுமை மிக்கச் சூரபன்மனை வெல்லும் போருக்குத் தகுதி உடையவர்களுமாகிய தேவர்களின் முடிமணியாக உள்ளவர் செங்குந்தர்களேயாவர்.

அ.ள் :

மரு - வாசனை, வெருவுதல் - அஞ்சுதல், தரு - கற்பகவிருட்சம், சிகாமணி - முடியில் இரத்தினம்.

14. ஆலசெங் குந்தர், அமுதசெங் குந்தர் தம் அண்டலர்க்குக்
காலசெங் குந்தர், கடம்பணி செங்குந்தர் கௌரிதரு
பாலசெங் குந்தர், பழிதீர்க்கும் செங்குந்தர் பற்றுதவ
சீலசெங் குந்தர், சிவானந்த ராகுமிச் செங்குந்தரே.

பொழிப்புரை:

சிவபெருமானுக்குத் தொண்டு செய்து அதனால் இன்பம் அடைகின்ற இச் செங்குந்தர்கள் சில வேளைகளில் விஷம் போலவும் சில வேளைகளில் அமுதம் போலவும் இருப்பார்கள்.தம் பகைவர்க்கு இயமனைப் போன்று இருப்பார்கள். கடப்ப மாலை அணிந்தவர்கள், உமா தேவி ஈன்ற பிள்ளைகளானவர்கள்,(தமக்கு ஏற்பட்ட பழியேயன்றி) பிறர்க்கு உண்டாகும் பழியையும் நீக்குபவர்கள், தவ ஒழுக்கத்தைப் பற்றி நடப்பவர்களுமாவார்கள்.

அ.ள் :

அண்டலர் - நெருங்காதவர், பகைவர் காலர் - எமனைப் போன்றவர், சீலம் - ஆசாரம்.

15. தாதா என்றேர்ப்பவர்க் கில்லையென் னாது தமக்குளதில்
ஏதாகிலும்பகிர்க் தீவர்பன் னாள் சுமந் தீந்தளித்த
மாதாவி னும்தயை வாய்ந்தவ ராய்அமர் வாய் களத்தும்
சேதா வெனநல் லிரக்கமுள் ளார்கள்இச் செங்குந்தரே.

பொழிப்புரை:

இச் செங்குந்தர்கள் எங்களுக்கு ஏதாகிலும் கொடுங்கள் என்று இரப்பவர்க்கு "இல்லை" என்று கூறாமல், தமக்காக வைக்கப்பட்டவற்றுள் ஏதேனும் பங்கிட்டுக் கொடுப்பவர்கள்: பன்னாள் விருத்திச் சுமந்து பெற்ற தாயைக் காட்டிலும் மிகக் கருணை உடையவர்கள் போர்க்களமாயினும் அங்கும் தாய்ப்பசு தன் கன்றினிடத்து இரக்கம் காட்டி உதவுவது போன்ற இரக்கத்தைப் பகைவரிடத்தும் உடையவர்கள்.

அ.ள் :

அமர்வாய் களத்தும் - போர்க்களத்திலும், சேதா செம்மை ஆ சிவந்த பசு காரா எருமை.

16.மாவைக்கைகொள்வர்;கொடையைக்கைக்கொள்வர்;வளரும்அணிக் கோவைக்கைக் கொள்வர்: வரிசைகைக் கொள்வர்: பொற்கோயின்மெய்க் காவல்கைக் கொள்வர்: கருணைகைக் கொள்வர்: கடம்பணியும் தேவைக்கைக் கொள்வர்: சிவநாமம் கைக்கொள்வர் செங்குந்தரே.

பொழிப்புரை:-

யானை, குதிரை முதலியவற்றை ஊர்தியாகக் கொள்பவர்களும், கொடைத் தன்மையை கைக்கொள்பவர்களும், அணிகள் நிறைந்த கோவை நூல்களைப் பெற்றுடையவர்களும், சிறப்பைக் கொள்பவர்களும், அழகிய தேவாலயங்களின் மெய்க்காவல் பணியை மேற்கொள்பவர்களும், இரக்கம் உடையவர்களும், கடப்பமாலை அணிந்த முருகப்பெருமானை துணையாகக் கொள்பவர்களும் இந்தச் செங்குந்தர்களேயாவர்.

அ.ள்:-

மா - விலங்கு, மணிக்கோவை - மணிமாலை(கோவை முதலிய நூல்கள்) கடம்பணியும் தே - முருகன், இச் செய்யுள் "கைக்கோளர்" என்னும் பெயரின் சிறப்பை விளக்குவதாக கூறப்பட்டுள்ளது.

## 4. தசாங்கம்

இதனை ஆக்கியவர் ஸ்ரீசத்திய சந்தர் ஆவர். தச + அங்கம். தச – பத்து, அங்கம் - உறுப்பு. ஒரு நாட்டை ஆளுகின்ற அரசனுக்கு அவனுடைய நாடு, நகர், மலை, ஆறு, மாலை, குதிரை, யானை, முரசு, கொடி, செங்கோல் ஆகிய பத்தும் உறுப்புக்களாக அமைந்து பெருமையும், அழகும் சேர்ப்பன. இவற்றை நாட்டிற்கு அணி என்று ஆன்றோர் கூறுவர். இவையே தசாங்கம் எனப்படும்.

செங்குந்தர்கள் முருகப்பெருமானுடைய துணைவர்களாகத் தோன்றித் தேவலோகத்தில் தேவர்களாக வாழ்ந்தவர்கள் பின்னர் சோழவம்சத்து அரசனாகிய முசுகுந்தச்சக்கரவர்த்தியின் வழியில் வந்து அரசர்களாகவும் விளங்கியவர்கள் ஆகையால் அரசர்களுக்கு இணையானவர்களாகவும் விளங்கியவர்கள். ஆகையால் அவர்களுக்குத் "தசாங்கம்" கூறப்பட்டது.

தேவலோகத்தில் தேவர்களாக வாழ்ந்தமை கருதி ஒரு தசாங்கமும் மண்ணுலகில் சோழர்மரபில் தோன்றி வாழ்ந்தமை கருதி ஒரு தசாங்கமும் ஆக இருவகைத் தசாங்கங்கள் இங்கு கூறப்படுகின்றன. எனவே தசாங்கத்தில் வரும் மலை, ஆறு, நாடு, நகர், முதலியன இதில் இரண்டிரண்டாகக் கூறப்படுதலைக் காணலாம்.

1. நாடு

"-நீத(ம்)எனும்
பூண்ஆரும் பல்கலைதேர் புண்ணியரும் கொண்டாடும்
சேணாடும் சோணாடும் தேர்".

நீதி என்கின்ற ஆபரணங்களைக் கொண்ட, பல கலைகளையும் ஆராய்கின்ற தருமவான்கள் கொண்டாடுகின்ற தேவலோகமும்,சோழநாடுமே அவர்களுடைய நாடு என்பதைத் தேர்ந்தறிவாயாக.

( சேணாடு-தேவலோகம் சேணாடு-சோழநாடு)

2. நகர்

"-பாடுபுரி
மந்தன் செருக்ககற்றி மாட்சியொரு காட்சிதரும்
கந்த(ன்) அப யன்பதிகள் காண்."

துன்பத்தைச் செய்கின்ற இயமனுடைய செருக்கினை அடக்கிய பெருமையுடன் முருகப்பெருமான் காட்சி தரும் கந்தபுரியும்,சோழனுடைய தலைநகரங்களுமாகும் ( அபயன்-சோழன், இலட்ச வீரர் உயிர் கவர்ந்து சென்ற இயமனுக்கு ஓலை அனுப்பி அவர்தம் உயிரை மீட்ட செய்தியும், இந்திராணி வீரவாகுதேவர் மகளுக்கு அளித்த கிளிப்பிள்ளையை யமதூதர் கவர்ந்து செல்ல இயமனுடன் போரிட்டு,அக் கிளிப்பிள்ளையை மீட்டசெய்தியும், குறிக்கப்படுகின்றது. இவை வீரவாகுதேவரால் செய்யப்பட்டன.)

3.மலை

"-ஏதும்
இரத்தல்செயா தியார்க்கு இருமை நலம் நல்கும்
அரத்தமும்நல்ஆத்தியுமேயாம்."

எந்த ஒரு பொருளையும் யாரிடமும் யாசித்துப்பெறாமல், எல்லோருக்கும் தாம் பொருள் கொடுத்து இம்மை,மறுமை ஆகிய இரண்டினுக்கும் நன்மை தருகின்ற செங்குந்தர்களுக்கு வெட்சிமாலையும். ஆத்திமாலையுமே மாலையாகும்.

( அரத்தல் - வெட்சி , ஆத்தி – ஆத்திமாலை )

4. ஆறு

"-எம்பரையைத்
தங்கையெனக் கொண்டு விணைத் தாங்கிமணைப் போற்றிசிவ
கங்கையு(ம்) ஒண் காவிரியும் காண்."

எங்கள் பராசக்தியான உமாதேவியைத் தங்கையாகப் பாவித்து ஆகாயத்தைக் காத்தும், மண்ணுலகத்தை வாழ்வித்தும் வருகின்ற சிவகங்கை நதியும், காவிரியாறுமே அவர்களுக்கும் உரிமை உடையவையாகும்.

5. மாலை

".இன்ன(ல்)அற
வந்தவரை ஆதரித்தும் வாழ்வித்தும் ஓங்கிவளர்
கந்தவரை நேரிவரை காண்."

தம்மை அடைக்கலமாக வந்து சேர்ந்தவர்கள் துன்பம் நீங்குமாறு அவர்களை ஆதரித்தும்.வாழவைத்தும் உயர்ந்து வளர்கின்ற கந்தவெற்பும் .நேரிமலையுமே அவர்களுடைய மலையாகும்.

6. குதிரை

"- ஞாலமிசை
மைச்சிரவர்க்(கு) எட்டாத வானவர்கோன் ஊர்தரும் உச்
சைச்சிரவம் கோரமெனச் சாற்று".

உலகில் கறுத்த முகத்தையுடைய அசுரர்களுக்கு நெருங்கமுடியாதவனாகிய தேவேந்திரன். ஏறிநடாத்தும் "உச்சைச்சிரவம்" என்னும் வெள்ளை குதிரையும், சோழமன்னர்களுடைய "கோரம்" எனப்படும்.
( சிரவர் - தலையை உடையவர், தலை ,ஆகுபெயராய் முகத்தைக்குறிக்கின்றது)

7. யானை

".வன்புற்(று)என்
காவதப்போ ரேனும் கடிப்பொழுதில் தேய்க்குறும்ஐ
ராவதம் ஆ றார்சரமும் ஆம்."

எட்டுக்காத தூரத்தில் உள்ள போராக இருப்பினும் கோபங்கொண்டு சென்று ஒரு நாழிகைப் பொழுதில் அப்போரில் ஈடுபட்டவர்களை தேய்த்து அழிக்கின்ற தேவலோகத்து "ஐராவதம்" என்னும் வெள்ளை

யானையும், சோழனுடைய "ஆறார்சரம்" என்னும் பட்டத்து யானையுமேயாகும்.

8. முரசு

".ஓதமெலாம்
சீதமொடு கூடித் திகழுங்கால் ஓங்கொலிகொள்
வேதமொடு வென்றியும் ஆகும் விள்."

கடல்கள் எல்லாம் குளிர்ந்து விளங்கும் போதும் ( ஊழிக்காலம்) ஓங்கி ஒலிக்கின்ற "வேதமுரசும்" வெற்றிமுரசுமே, அவர்களது முரசுகளாகும். ( சீதம் - குளிர்ச்சி , ஓதம் - கடல் , விள் - சொல்)

9. கொடி

-"துங்கமிகு
காவலொரு வைகித்தம் காவலர் மெய் காக்கும் எழில்
சேவலொரு வேங்கையுமாம் தேர்".

உயர்ந்த காவலுடன் பொருந்தி இருந்து, தம் அரசர்களது உடம்பினைக் காப்பாற்றுகின்ற அழகு மிகுந்த சேவற் கொடியும் அவர்களது புலிக் கொடியுமே அவர்களது கொடியாகும்.
(செங்குந்தர் மெய் காக்கும் செயல் அவர்களது கொடிக்கும் கூறப்படுகிறது).

10. செங்கோல்

-" கோதில் பல
வானவரை மானவரை வாழ்விப்பான் எங்கு(ம்) ஒன்றே
ஆனதனிச் செங்கோல் அறி.

மனமாசு அகன்ற அளவற்ற தேவர்களையும், மனிதர்களையும் வாழ்விப்பதற்காக எல்லா இடங்களிலும் ஒரே தன்மையுடன் அரசாட்சி நடாத்தும் ஒப்பற்ற செங்கோல் அது என்று அறிவாயாக. (தனிச் செங்கோல்- ஒப்பற்ற செங்கோல் வானுலகிலும், பூவுலகிலும் செங்கோல் ஒரே பெயரால் கூறப்பட்டது).
திகழ்- விளங்குகின்ற, புறவு- புறா, கோது- குற்றம், மானவர்- மனிதர், தனி- ஒப்பற்ற.

## 05. ஊசல்

இது ஸ்ரீ மயிலை நாதர் அவர்களால் இயற்றப்பட்டது. ஊசல் என்பது தெய்வங்களையும், மன்னர்களையும் ஊசலில் அமர வைத்து அவர்களது புகழையும், பெருமையையும், அவர்கள் தம் செயல்களையும் கூறி அவ்வூசலை அசைத்து ஆடுமாறு செய்வது. இங்கே செங்குந்த வீரர்களின் புகழ், பெருமை, செயல்கள் கூறி ஆட்டுமாறு அமைக்கப்பட்டுள்ளது.

1. திரு விளக்கு நவவீரர் குலத்தில் வாழும்
  செல்வர், சொன்ன நாவிலங்கா இயல்பை உள்ளோர்,
மருவிளங்கும் செங்கடப்ப மாலை பூண்ட
  மன்னவர்கள், சிவநீதி மறவா மைந்தர்,
தருவிளங்கும் தேவர்புலி தழைக்க வாழ்வு
  தருவோர்கள், ஊசலெனும் தமிழைப் பாடச்
செருவிளங்கும் ஆனைமுக விநாய கன்தாள்
  சென்னியில்வைத்(து) அநு தினமும் சிந்தை சேர்ப்போம்

பொழிப்புரை:-

அழகு பொருந்திய நவ வீரர்களை முன்னோர்களாகக் கொண்ட குலத்தில் தோன்றி வாழ்கின்ற செல்வர்களும், எந்தக் காலத்திலும் சொன்ன சொல்லில் இருந்து மாறாதவர்களும் மணம் வீசும் சிவந்த கடப்ப மாலையை அணிந்துள்ள அரசர்களும், சைவ சமயத்தை மறவாமற் போற்றுபவர்களும், கற்பகத்தரு அமைந்த தேவர்நாடு செழிக்குமாறு தேவர்களுக்கு வாழ்வு தந்தவர்களும் ஆகிய செங்குந்தத் தலைவர்கள் மீது ஊசல்பாட்டு பாடுவதற்கு, போரில் விளக்கம் பெற்ற யானையின் முகமுடைய விநாயகப் பெருமானுடைய திருவடிகளைத் தலையில் சூடி நாள் தோறும் தியானிப்போமாக.
(மரு- வாசனை)

2. வச்ரமணி யால்கடைந்த கால்கள் நாட்டி,
  வைடூரி யத்தினுயர் விட்டம் போட்டு,
பச்சைநிற மரகதத்தால் கொடுங்கை சேர்த்துப்
  பருநீல மணிப்பலகைத் தொட்டில் பூட்டி,
நிச்சயச்செம் பொன்னின் வடக் கயிறு தூக்கி,
  நிலையாகச் சோடித்த ஊசல் மீதே,
கச்சிமா வடிக்கம்பர் பங்கில் வாழ்ந்து
  கௌரியுமை புத்திரரே ஆடிர் ஊசல்.

பொழிப்புரை:-

அழகாகக் கடைந்த வைரத் தூண்களை நட்டு. தூண்களை இணைக்கும் விட்டத்தை வைடூரியத்தில் அமைத்து, பசிய மரகதக் கற்களால் முன்வளைவு அமைத்து, நீல மணியினால் இணைக்கப்பட்ட ஊசல் கயிற்றைத் தூங்கவிட்டு நிலையாக அழகுறச் செய்யப்பட்ட ஊசலில், கச்சியம் பதியில் மாவடி நிழலில் வீற்றிருக்கும் திருவேகம்பர் இடப்பாகம் கொண்ட பசிய நிறமுடைய உமாதேவியின் குமாரர்களே!ஆடி அருள்வீர்களாக!

3. தருசின்னத் தோல்துடிக்க, மேள மோதத்,
தவண்டையொலி கறங்க, மிகு வேணு நாதம்
வருசின்னம் எக்காளை ருத்ர வீணை
மகிழ்சுரமண் டலநாத ஒலிகள் ஆர்ப்ப
ஒருவருக்கும் உலகிலிந்தப் பெருமை வாரா(து)
உரைக்கிலெனச் சகலவாத் தியம்முழங்க
குருபரன்தா ளிணைமலரைப் போற்றி நாளும்
குடிபெறுஞ்செங் குந்தர்களே! ஆடிர் ஊசல்.

பொழிப்புரை:-

வெற்றி முரசு ஒலிக்கவும், மேளம் கொட்டவும், பேருடுக்கை ஒலிக்கவும், புல்லாங்குழல், திருச்சின்னம் , எக்காளம் இவை ஊதவும் தேவலோகத்து இசைக்கருவிகள் ஒலிக்கவும், இந்த உலகில் வேறு எவருக்கும் இது போன்ற பெருமைகள் கிடைக்கமாட்டா. என்று கூறுவன போலச் சகல விதமான இசைக் கருவிகளும் இசைக்கவும், குருபரனாகிய முருகப் பெருமானுடைய திருவடிகளை நாள்தோறும் வழிபட்டுக் குடிப்பெருமையில் சிறக்கும் செங்குந்தர்களே ஊசல் ஆடி அருள்வீர்களாக!

(சின்னத் தோல்- வெற்றி முரசு, தவண்டை- பேருடுக்கை, கறங்க- ஒலிக்க, சுரமண்டலம்- தேவலோகம்)

4. கயிலையோடு மேருவினைச் சூழ வேமெய்க்
காலங்கொண்ட காவலரே! ஆடீர் ஊசல்
பயனறிந்தே அடைக்கலமென் றடைந்த பேரைப்
பரிவுடன்ஆ தரிப்பவரே! ஆடிர் ஊசல்,
தயவுதரும் பதவியில்எந் நாளும் வாழும்
சற்குணமுண் டானவரே! ஆடீர் ஊசல்,
அயனொடுநா மகள் அரியோ(டு) ஆக்கம் போல
அவரவர்கள் மனைவியரோ டாடீர் ஊசல்.

பொழிப்புரை:-

கயிலை மலை, மேரு மலை முதலியவற்றைச் சூழ்ந்து நின்று மெய்க்காவல் பூண்டவர்களும், தம்மை அடைக்கலமாக வந்து அடைந்தவர்களை அன்புடன் ஆதரிப்பவர்களும், கருணையுடன் கூடிய அதிகாரத்தில் என்றும் விளங்கி நற்குணம் கொண்டவர்களும் ஆகிய செங்குந்தர்களே பிரமனும், சரஸ்வதியும், திருமாலும், இலக்குமியும் இணைந்துள்ளமை போன்று நீவிர் உம் மனைவியரோடு அமர்ந்து ஊசல் ஆடியருள்வீர்களாக!

(ஆக்கம் - செல்வம், இங்கு இலக்குமியைக் குறித்தது)

## 6. பெரிய கட்டியம்

கட்டியம் என்றால் "புகழ் கூறுதல்" என்று பொருள். அரசர்கள், வள்ளல்கள் முதலியோரது புகழை விளக்கும் பெருமைகளைக் கூறி, கையில் கோல் கொண்டு முன் செல்லும் ஒருவனை "கட்டிய காரன்' என்று கூறுவர். இன்னும் நாடகங்களில் இவ்வகை பாத்திரங்களைக் காணலாம்.

கட்டியகாரன் தலைமை ஏற்றோர் பெருமைகளை விபரித்து அதிகளவில் கூறுதல் "பெரிய கட்டியம்" எனவும், குறைவாக சுருங்கிய அளவில் கூறுவது "சின்னக் கட்டியம்" எனவும், கூறப்படும். செங்குந்தர் கையில் உள்ள ஈட்டியின் - (குந்தத்தின்) பெருமைகளை விளக்க உரைப்பது பெரிய கட்டியம் என்னும் இப்பகுதியாகும்.

5. அருளோங்கு கயிலயங் கிரியில் அரண் அருள்குகற்(கு)
அநுசர்கை ஏந்துகுந்தம்
அம்பிகை அகங்களித் துலகுய்ய அவர்கரத்(து)
அங்கைகொடு தந்தகுந்தம்
அமரர்துயர் கெடஅவுண வேட்டஞ் செயக்கருதி
ஆறுமுகனொ டேகுகுந்தம்
அவை எனும் கரம் வீசி ஒலிகொண் டெழும்பெரிய
ஆழ்கடல் தாவுகுந்தம்
இன்னாமை புரிஇராக் கதர்சூழும் நகரினை
இடித்து துகள் ஆக்கு குந்தம்
இனி அமர்க ளிலையெனாச் சூரன் புலிக்கொடியை
எய்திப் பறித்த குந்தம்
பொருளோங்கு தண்டமிழ்ப் புகழோங்க மநுகுலம்
போந்துலகை ஆண்டகுந்தம்
பொங்கின மனுக்கோலை போக்கி அவன் மனைவவ்வு
பொற்கிள்ளை பெற்றகுந்தம்

பொருவில்சந் தானமாங் கனியினுக் காக்குடம்
புக்குவிறல் கொண்டகுந்தம்
பொதுநீக்கி யாடுமா காளிகைத் தானம்
பொருக்கெனக் களை செங்குந்தம்.
பொடிதனில் வலிகொள்வல் லானைவென்(று) அவன் மனைவி
போற்ற உயிர் தந்தகுந்தம்,
தெளிகொள் ஆ ருயிரெல்லாம் சிந்தித்த எய்தபல்
சிவாலயம் அமைத்த குந்தம்
தெற்றியினும், இல்லினும் தன்னை வழிபடுவோர்க்கென்
சித்திதந் தாள் செங்குந்தம்,
தெறிதராச் சிந்தையொடு தனை அருள் சிப்பவரைச்
சிவபதத் தேற்றுகுந்தம்,
தெண்டிரைக் கடல்சூழும் உலகில்கைக் கோளர்தம்
செயவீர செங்குந்தமே.

பொழிப்புரை:-

அருள் மிகுந்த கைலாசமலை இறைவனாகிய சிவபெருமான் தோற்றுவித்தருளிய முருகப் பெருமானுடைய தம்பியர் கைகளில் தாங்குவதும், உமா தேவி மனம் மகிழ்ந்து உலகம் வாழுமாறு நவவீரர் கையில் கொடுத்தும் தேவர்கள் துயரம் நீங்குமாறு அவுணர்களை அழிக்க ஆறுமுகப் பெருமானுடன் துணையாகச் சென்றதும், அலைகளாகிய கைகளை வீசிப் பேரொளியுடன் விளங்கும் பெரிய கடலைத் தாவிக் கடந்ததாகவும் . வஞ்சம் நிறைந்த கொடிய மனம் கொண்ட சூரபத்மனுடைய சபைக்குச் சென்று அவுணர்களை அழித்து நகரத்தை இடித்துத் தூளாக்கியதும் இனிப்போர் இல்லை என்று சூரபத்மன் கையில் இருந்த புலிக் கொடியைப் பறித்துத் தனதாக்கிக் கொண்டதுடன் பொருள் நிறைந்த இனிய தமிழின் புகழ் உயரும்படி மனுகுலத்தில் தோன்றி உலகை ஆட்சி செய்ததும், கோபம் கொண்டு இயமனுக்கு ஓலை அனுப்பி அவன் தன் மனைவிக்காக கவர்ந்து சென்ற அழகிய கிளியை மீட்டதும் சேரநாடு சென்று சந்தனமரங்கள் பெற்றதுவும் நடனப்போரில் காளியின்கையில் இருந்த தாளத்தைப் பறித்ததும் வலிமை வாய்ந்த வல்லானை வென்று அவன் மனைவி வேண்டிக் கொண்டதால் அவனுக்கு உயிர்ப்பிச்சை அளித்ததுவும், தெளிவமைந்த தில்லை நகரில் காளி தேவியின் தேர் ஆழ்ந்துவிட்டபோது அதனை ஓடச் செய்ததுவும், உயிர்கள் வழிபட்டுத் தாம் நினைத்தவற்றைப் பெற அளவற்ற சிவாலயங்களை அமைத்துததுவும், தங்கள் இல்லங்களிலும் திண்ணைகளிலும் வந்து தங்கித் தம்மை வேண்டுவர்க்கு வேண்டுவன கொடுத்து உதவும், நிலைத்த சிந்தையுடன் தன்னை வழிபடுபவர்களை சிவகதியில்

சேர்ப்பதுவும், தெளிந்த அலைகள் உடைய கடலால் சூழப்பட்ட இவ்வுலகில் கைக்கோளர் எனப்படும் செங்குந்தர் கையில் உள்ள வெற்றியும் வீரமுமுடைய செங்குந்தமேயாகும்
(தெற்றி- திண்ணை)

## 07. **சின்னக் கட்டியம்**

இங்கே மிக்க வலிமை உள்ளவனாகவும் பிறரைத் துன்புறுத்தியும் வாழ்ந்த "வல்லான்" என்பவனை வெற்றிகொண்ட செங்குந்தர்களின் பெருமை கூறப்படுகின்றது.

1. வஞ்சகம தாகவீ ராணமெனும் ஏரியிடை
 வகைபெறத் தூண்கள் நிறுவி
 மண்டபம் கட்டிமற் றதிலிருங்(து) எண்திக்கின்
 மன்னரை வதைத்த வல்லான்
 செஞ்சிலைத் திறமும்வாள் தீமையுங் கண்டமாய்
 தீவினைகள் வந்த எனவே
 சிந்தைகொட வன்தனைச் சிதை செய்வகை ஆய்ந்தினித்
 தினையளவு போதும் உவனை.

2. விஞ்சைவிட லாகாதெ னச்செவ்வேள் துணைவர்தம்
 விழுக்குலத் தவர்கள் அவ்வால் அல்லால்
 வேறொருவ ரால்அணுவும் ஆகா தெனத்தேறி
 விண்ணவர் வியப்ப இலகும்
 பஞ்சவன மேயவிரு துக்கொடி முனாஞ்சீர்
 படைத்த செங் குந்தர்கள் தமிற்
 பன்னிருவர் கையிலே வெற்றிலைப் பாக்கினைப்
 பரிவாக வேஅளிக்க.

3. கொஞ்சிகை கொட்டிக் குதித்தோடி வழியில்நேர்
 குமரியிரு வர்க்கிவருங்
 கூவுபரி யாப்பினுக் கொருவனும் உயிர்தந்து
 குரைசெய்நாய் புலிகரடிகள்
 மிஞ்சிடா வண்ணநால் வர்கள் துணிய, அழல்மீது
 மீறியொரு வன்படுக்க!
 மேலேறி அகழ்முதலை வாய்க்கொருவ னும்வயிரம்
 மேயகாற் கொருவனும் உயிர்.

4. அஞ்சாமல் தந்துபின் வல்லா னிடத்திருவர்
 அணுகிபொற் றலையானை கோல்
 அணியமாய விரதநூல் வகைசால பரிசேனை
 ஆதியை யவன்தரக் கொண்டு
 எஞ்சா(து) அவன் மனைவி வேண்டமீண் டபயற்கும்

எழில்தில்லை அரணடிக்கும்
இணையில் தம் சிரமளித் துலகர்தொழ பதின்மரொடும்
ஈறில்பதம் அடைசீலரே.

பொருள்முடிவு:-
வல்லானுடைய சிலைத் திறமும் வாள் தீமையும் கண்ட சோழ மன்னன் ஆய்ந்து "இனி இவனை விஞ்சி விடல் ஆகாது" எனவும் அவனை வெல்லச் செவ்வேள் குலத்தவர்கள் அல்லால் வேறொருவரால் ஆகாது" எனவும் முடிவெடுத்து செங்குந்தர்களில் (பழுவூர் வீரன், நாராயணன், கச்சித் தனியன், ஒற்றியூரான், கோளாந்தகன், புலியூரான், பிணவன், கண்டியூரான், முதுகுன்றான், தஞ்சை வேம்பன், களந்தையரசன், புற்றிடங்கொண்டான்) பன்னிருவர் கையில் வெற்றிலை, பாக்கு முதலிய மங்கலப் பொருட்களைக் கொடுத்து விடையளித்து அனுப்பினான். அவர்கள் மிக்க மகிழ்ச்சியோடு குதித்து ஓடி, வல்லானுக்காக வந்து எதிர்த்த காளி, துர்க்கை இருவரும் தம்மில் இருவரைப் பலி கொடுத்தும், ஒருவனைப் பலியிட்டுத் தெப்பமாக்கியும், காவல் காத்த நாய், புலி, கரடிகட்கு நால்வர் இரையாகியும் நெருப்பு ஆற்றின் மேல் ஏறிச் சென்றும் அகழி முதலைக்கு ஒருவனை இரையாக்கியும் வைரத் தூணில் ஒருவனை அறைந்து கொன்று இரத்தக் கறையைப் பூசி அதில் ஏறிச் சென்றும் எஞ்சிய இருவர் சென்று வல்லானை வென்று, அவன் வலிமையை அடக்கி அவனைக் கொல்லப்போகும் போது அவன் மனைவி இரந்து வேண்ட அவளுக்காக இரங்கி அவனைக் கொல்லாது அவளுக்கு மாங்கல்யப் பிச்சை கொடுத்து அவனுடைய தலை போன்ற பொன் தலையையும் வேறும் பல பொருட்களையும் கைக்கொண்டு மீண்டு சோழனிடம் வந்து நடந்தவற்றை தெரிவிக்க அவன் நீங்கள் தலையை எவ்வாறு அரிந்தீர்கள் என்று கேட்ட மாத்திரத்தில் "இப்படித்தான் அரிந்தோம்" என்று தங்கள் தலைகளை தாங்களே அரிந்து வீழ்த்தி முன்னைய பன்மருடன் இவர்களும் சேர்ந்து தில்லைக் கூத்தன் திருவடிகளை அடைந்தனர். பன்னிருவரும் வீர சொர்க்கம் அடைந்தனர்.

## 08. செங்குந்தர் சிலாக்கிய மாலை

சிலாக்கியர் என்பது உயர்ந்தோர் என்று பொருள்படுவது செங்குந்தப் படையைக் கொண்டமையால் செங்குந்தர் என்று புகழப்படும். மரபினருள் உயர்ந்தவர்கள் இவர்கள் என்று கூறும் நூல் இதுவாகும். இந்நூலாசிரியர், சைவசித்தாந்த வேதாந்த ஞானாசிரியராக விளங்கியவர் எனவும் மெய்கண்ட சிவாச்சாரியார் மரபில் வந்த முத்தமிழ் சூரி வீரபத்திர தேசிகர் எனவும் போற்றப்படுகிறார்.

விநாயகர் காப்பு

கமலன் முதலாக் கழறுபெருந் தேவர்
மும்மலமொழி அத்தி முகனே!- அமலனருள்
சீரார் குந்த சிலாக்கியர்மா லைசொல நீ
நேராயென் நாவுவந்து நில்.

பொழிப்புரை:-

பிரம தேவன் முதலாகச் சொல்லப்படுகின்ற எல்லாத் தேவர்களுடைய மும்மலங்களையும் அழித்து அருள்புரியும் யானைமுகமுடைய விநாயகப் பெருமானே! மல அழுக்கற்றவராகிய சிவ பெருமான் அருளிய சிறப்புமிக்க செங்குந்தரில் உயர்ந்தோர் மீது நூல் செய்வதற்கு துணையாக என் வாக்கில் மகிழ்ச்சியுடன் நின்று அருள் புரிவீராக!

1. சண்முகக் கடவுள்

பொன்னுல கோர்: அவுண் பேர்க் குடைந்(து) உற்றபொழுதமலன்
முன்னுறும் ஆறு முகக்கண் பொறிதர முற்றிவெஞ்சூர்
முன்னுறும் மாயேந் திரபுரி நண்ணிஅம் மாற்றலனைத்
தின்னுறும் வேல்கொண்ட செவ்வேள்செங் குந்தசிலாக்கியரே

பொழிப்புரை:-

பொன்னுலகமாகிய தேவலோகத்தில் வாழும் தேவர்கள் அவுணனாகிய சூரபதுமனுடைய போருக்கு எதிர்நிற்க முடியாமல் தோற்று வந்த பொழுது, சிவபெருமான் தன் ஆறு நெற்றிக் கண்களிலிருந்து தீப்பொறிகளை வெளிப்படுத்த அவைகளில் தோன்றி சூரபதுமனுடைய வீரமகேந்திரபுரி என்னும் நகரினுள் சென்று அப் பகைவனை அழிக்கும் வேலைக் கையில் தாங்கிய முருகப் பெருமான் செங்குந்தர் குலத்தில் தோன்றிய உயர்ந்தவனாவான்.
(உடைந்து- தோற்று, மன்னுறும்- வாழும்)

2. நவவீரர்

அரன்(அ)வுண் மான உகுத்த அனற்பொறிக்(கு) அஞ்சுமுமை
வரமுறு தான்சிலம் பின்மணி ஒன்பதுன் மன்னியெழும்
உருவெளிச் சந்திகள் மாட்டு(உ)தித் தீட்டி உவளருளச்
செருமுகம் கா(ண்)நவ வீரர் செங்குந்த சிலாக்கியரே.

பொழிப்புரை:-

சிவபெருமான் சூரபதுமனை அழிக்கத் தோற்றுவித்த தீப்பொறிகளைக் கண்டு அஞ்சி ஓடிய உமாதேவியின் காற் சிலம்பில் இருந்து சிதறிய நவமணிகளில் தோன்றிய நவசக்திகளிடத்தில் தோன்றிய [நவவீரர் கையில்] உமாதேவியால் செங்குந்தம் அருளப்பட்டுச் சென்று

போர்க்களம் கண்ட நவ வீரர்கள் செங்குந்தர்களுக்குள்ளே உயர்ந்தவர்களாவர்
(உகுத்த- சிந்திய, ஈட்டி- எறிவேல், குந்தம்)

3. இலக்கவீரர்கள்

உமையின் உருஒளிச் சக்திகள் அஞ்ஞான்(று) உமாபதிதன்
இமையின் அருள்கொடு சூலுத லும்உவ(ள்) ஏய்சினத்தால்
சமையும் வியர்விற் கரவாளி னோடும் சனித்துக் கந்த
சிமையம் உறுமிலக் கத்தோர் செங்குந்த சிலாக்கியரே.

பொழிப்புரை:-

உமாதேவியின் அருளில் தோன்றிய நவசக்திகள் இறைவனுடைய திருவருளின் நோக்கால் கருப்பமுற அம்மை கொண்ட கோபத்தால் அச் சக்திகளிடம் உண்டான வியர்வையில் இருந்து வாளேந்திய கையினராகத் தோன்றி கந்தகிரியில் (முருகனுக்குத் துணையாக ) வந்து சேர்ந்த லட்சம் வீரர்கள் செங்குந்தரில் உயர்ந்தோர்களாவர்.
(இமையும் அருள்- நொடிப் பொழுதில் உண்டான திருவருள், சூலுதல்- கருவுறுதல், ஏய்சினம்- கொண்டகோபம், சமையும்- உண்டாகும், சனித்து- தோன்றி)

4. மெய்கண்ட சிவாச்சாரியார்

முந்தடல் மொய்ம்பன் அருந்தவம் ஆற்றும் முகமுகனை
நிந்தை செய்த ஊழ்முறை நிற்ப உலகில் நிரிச்சுரர் கோன்
உந்த மகதி முனியர னாரிடத்(து) ஓதவுவை
சிந்தச் சுவேதத் துதித்தோர் செங் குந்த சிலாக்கியரே.

(நவரத்தின சக்திகளது வியர்வையில் ஒரு லட்சம் வீரர்கள் தோன்றியது போல நாரதமுனிவர் ஏதோ ஒரு செய்தியைக் கூறக் கேட்டு சிவபெருமான் சினம் கொண்ட பொழுது அவருடைய வியர்வையில் சில வீரர்கள் தோன்றினர். அவர்களும் செங்குந்த சிலாக்கியரே என இப் பாடல் கூறுவதாகக் தெரிகிறது. ஆயினும் வரலாறு தெரிய வராததனால் இதன் பொருள் தெளிவாக விளங்கவில்லை).

5. தில்லைக் கொடி ஏற்றுவித்தோர்

தம்புக ழோங்கநூல் தோய்பா(கு) உறுமுறை தன்கூர்ப்பாத்து
உம்பர் அமுதின் ஒழுகும் அதையுண் உமாபதியால்
அம்பல வன்துசம் ஏற்றும்ஆ திக்கமோ டார்கொடிப்பாச்
செம்பியன் ஏற்றிடப் பெற்றோர் செங் குந்த சிலாக்கியரே.

பொழிப்புரை:-

தம்முடைய புகழ் உயருமாறு நூல்களுக்கு இடும் கஞ்சியைக் கையிலேற்று உண்ட ஆசாரியரின் முழங்கை வழியாக ஒழுகிய கஞ்சியைத் தாம் உண்ட உமாபதி சிவாச்சாரியார் மூலமாக பாடப்பெற்று தில்லை நடராசப் பெருமான் கோயில் திருக்கொடியை முற்றும் உரிமை பெற்று சோழமன்னனால் புகழப்பெற்றவர்கள் செங்குந்தரில் உயர்ந்தோராவார்.

(குறிப்பு) உமாபதி சிவாச்சாரியரின் குருவான மறைஞான சம்பந்தர் தம் சீடனின் பரிபக்குவ நிலையை சோதிக்க வேண்டி, ஒரு நாள் செங்குந்தர் பாவு தோய்க்கும் தெருவழியே சென்று அவர்கள் பாவுக்கு இடும் கஞ்சியை இரண்டு கைகளிலும் ஏற்றுக் குடிக்க, குருவின் முழங்கை வழியே ஒழுகிய கஞ்சியை தம் கையால் ஏற்றுச் சீடராகிய உமாபதியார் உண்டார் என்பதுவும் தில்லைப் பெருமான் கோயில் பூசையில் உமாபதியார் தள்ளி வைக்கப்பட்டதும் கொடி ஏறாமல் தடைப்பட்டதும் மீண்டும் உமாபதியார் கொற்றவன் குடியில் இருந்து செங்குந்தர்களால் நெய்யப்பட்ட கொடிச் சீலை, கொடிக் கயிறு என்பவற்றோடு வருவிக்கப்பட்டு உமாபதியார் “கொடிக்கவி” பாடி கொடியேற்றுவித்தார். என்பதுவும் வரலாறு, சந்தானாசிரியார் நால்வரில் ஒருவராகிய உமாபதி சிவாச்சாரியார் கொற்றவன் குடி உமாபதி சிவாச்சாரியார் எனப்படுவார்.

(கூர்ப்பரம்- முழங்கை, உம்பர் அமுது- தேவாமிர்தம், துவசம்- கொடி)

6. திருமூல தேவர்

ஒப்புயர் வற்ற சிவாகமம் ஏழ்நான்கின் உண்மையெல்லாம்
எப்புவ னத்தும் விளங்கஆ மேய்க்கி இறந்தவுட
விற்புகுந் தாண்டுக்கொன் றாகவே மூவா யிரமனுவைச்
செப்புறு ஞானக் கதிரோர் செங் குந்த சிலாக்கியரே.

பொழிப்புரை:-

ஒப்புயர்வு இல்லாத இருபத்தெட்டு சிவாகமங்களில் கூறப்பட்ட கருத்துக்களை அனைவரும் அறிந்து கொள்ளுமாறு, இறந்து கிடந்த “மூலன்” என்னும் இடையன் உடலில் தாம்புகுந்து (யோகநிலையில் இருந்து) ஓர் ஆண்டுக்கு ஒரு பாடலாக மூவாயிரம் பாடல்கள் (கொண்ட திருமந்திரம் என்னும் நூலைச்) சொல்லிய அறிவுவிளக்கமான திருமூலர் செங்குந்தரில் உயர்ந்தோராவார்.

(“மூலன் உரைத்த தமிழ் மூவாயிரம் என்பது முதுமொழி, இது திருமந்திரம் என்று போற்றப்பட்டுப் பத்தாம் திருமுறையாக வழங்கப்படுகிறது.)

(மனு- மந்திரம், ஞானக்கதிரோன் - அறிவு ஒளி உடையவர்)

7. இடங்கழிப் பெருமான்

தன்னர சில்சைவ மாணெறி வைதிகம் சார்நெறிகள்
மன்னுறு நாளில் அரண்தொண்டர்க் குண்டுவழங்கலற்ற
இன்னலொ டேநெற் களவாடு வோர்முன் இளையவரே
தின்ன நிதியும் விடுத்தோர் செங் குந்த சிலாக்கியரே.

பொழிப்புரை:-

இடங்கழி நாயனார் என்னும் இவர் தம்முடைய அரசாட்சியில் உயர்ந்த சைவநெறிகளும் வைதீக நெறிகளும் பொருந்த ஆளும் போது சிவனடியார்களுக்கு அமுது படைக்கும் அன்பர் ஒருவர் உணவிட இல்லாத துன்பத்தினால் (அரசனுடைய களஞ்சியத்தில் ) நெல்லைத் திருட ( சேவகர்களால் பிடிபட்டு அரசன் முன் உண்மையைக் கூற) அரசர் உண்மையை உணர்ந்து நெல்லுடன் பொன்னையும் கொண்டு போகுமாறு செய்தார். இவர் செங்குந்தர்களுக்குள்ளே உயர்ந்தவராவார்.
(மாண்நெறி- பெருமையுடைய வழி)

8. எறிபத்த நாயனார்

என்றும் மலர்பறித் தேறூர்திக் காரமியற் றுந்தொண்டர்
நின்றல றச்சிந்தும் தும்பியொ(டு) ஐவர் நெடுமழுவால்
பொன்ற விடுத்திறை மெய்யன்புக் கின்னுயிர் போக்க எண்ணிச்
சென்ற உயிரை மீள் வித்தோர் செங்குந்த சிலாக்கியரே.

பொழிப்புரை:-

நாள் தோறும் மலர்களைப் பறித்து சிவபெருமானுக்கு மாலை கட்டும் (சிவகாமி ஆண்டாள் என்னும்) தொண்டர் புலம்புமாறு (அவர் கையிலிருந்த பூக்கூடையில் உள்ள) மலர்களைச் சிதறிய யானையையும் (குத்துக் கோல் காரர், பாகர் முதலிய) ஐந்து பேரையும் கோடரியால் கொன்ற (எறிபத்த நாயனார் ) சிறந்த இறை அன்பைக் கண்டு தம் முயிரைப் போக்கிக் கொள்ள எண்ணிய புகழ் சோழரின் உயிர் போகாமல் மீட்ட எறிபத்தர் செங்குந்தர்களுக்குள்ளே உயர்ந்தவராவார்.
( ஏறோர்தி- எருதினை வாகனமாக உடைய சிவன்)

9. கணம்பு நாயனார்

தொகை பெறும் பல்பொரு ளால்சிவன் கோயிலில் தூய்விளக்கிட்(டு)
அகமகிழ் கால்(இ)ன்மை எய்தி கணம்புல் அறுத்துவிற்று
மிகைகெடல் இன்றி அதையே எரித்துப்பின் மிக்கின்மையால்
சிகை எரித் திட்ட செயலோர் செங் குந்த சிலாக்கியரே.

பொழிப்புரை:-

தொகுக்கப் பெற்றுள்ள நிறைந்த செல்வத்தால் சிவபெருமான் கோயிலில் திருவிளக்கேற்றி உள்ளம் மகிழ்ந்திருக்கும் போது வறுமை அடைந்த( திரு விளக்கேற்றப் பொருளின்மையால்) கணம் புல்லை அறுத்து அதனை விற்று விளக்கெரித்தும் ஒருநாள் அதுவும் விற்காமல் போக அதனையே விளக்காக எரித்து அன்று அதுவும் காணாமல் போக தம் தலை முடியையே விளக்கில் கொளுத்தி எரித்த செயலுடைய கணம்புல்லர் செங்குந்தர்களுக்குள்ளே உயர்ந்தவராவார்.

( கணம்புல்- ஒருவகைப்புல், மிகைகெடல்- சுமை தீர்த்தல்)

10. தண்டியடிகள்

முகைத்த பொழுதே பெறுங்குரு(டு) ஏகிக்கண் முன்தெரிய
இகைத்த கயத்தொண் டினிதின்முற் றிப்புகழ் ஈறிவொட்டால்
பகைத்த அமணர் குருடாகி ஏந்தல் பணிப்பினவர்
திகைத்து நிலைவிடச் செய்தோர் செங்குந்த சிலாக்கியரே.

பொழிப்புரை:-

தோன்றிய பொழுதே இருந்த குருடு நீங்கி கண்பார்வை தெரிய நடந்த குளத்தின் திருப்பணி இனிதே நிறைவடைய கூறிய சபத மொழியால் பகை கொண்ட அமணர்கள் குருடர்களாகி, அரசன் கட்டளைப்படி (செய்வதறியாது) திகைத்து, இருந்த இடத்தைவிட்டு அகலுமாறு செய்த தண்டியடிகள் செங்குந்தர்களுக்குள்ளே உயர்ந்தவராவார்.

11. ஒட்டக்கூத்தர்

மங்காத கீர்த்தி மறைநெறி ஆறை மனுமுறைகள்
பொங்காறிற் பக்கவிச் சக்கரவர்த் திப்பெயர் பூண்டுதிறை
தொங்காதவை தரச் சத்தியச் செங்கோல் சுமந்து சிரச்
சிங்கா தனத்திவர்ந் தாள்வோர்செங் குந்த சிலாக்கியரே.

பொழிப்புரை:-

மனுநீதிமுறை சிறந்து விளங்கக் "கவிச் சக்கரவர்த்தி" என்ற பெயர் தாங்கி குறையாத புகழையுடைய வேத ஒழுக்கம் ஆறினையும் அலைதிறைப் பொருள் தளராமல் தமக்குக் கொடுப்பப் பெற்று உண்மையைச் செங்கோலாக கைக்கொண்டு (ஆயிரத் தெண் தலைகளை வெட்டி அமைத்த) சிரச் சிங்காசனத்தின் மீது ஏறியிருந்து ஆண்டவர் ஒட்டக்கூத்தர். இவர் செங்குந்தர்களுக்குள்ளே உயர்ந்தவராவர்.

(மறை நெறி ஆறு- பூர்வ, மீகாம்சை முதலிய ஆறு நூல்களின் நெறிமுறைகள், தொங்காது- தளர்ச்சியின்றி, இவர்தல்- ஏறியிருத்தல்)

12. குகனேரியப்ப நாவலர்

பிறப்பிலி ஈன்ற பிரான்காதை யைஅவன் பேரருளால்
துறப்பவ ரும்துதிப் பக்கச்சி யப்பன் முன்சொற்ற அறு
திறப்பரு திக்கப் புறத்தோர் பகுதியைத் தீஞ்சுவைகள்
சிறப்ப உரைத்த திறவோர் செங் குந்த சிலாக்கியரே.

பொழிப்புரை:-

பிறப்பு, இறப்பு இல்லாதவராகிய சிவபெருமான் அருளிய முருகப் பெருமானுடைய வரலாற்றினை அம் முருகப் பெருமானுடைய பெருங் கருணையால், முற்றும் துறந்த முனிவர்களும் வணங்குமாறு கச்சியப்ப சிவாச்சாரியார் முதலில் கூறிய ஆறு பகுதிகளுக்கு பிறகு ஒரு பகுதியை (ஏழாவதான உபதேச காண்டத்தை) இனிய சாலைகள் எல்லாம் சிறந்து விளங்குமாறு கூறிய குகனேரியப்பர் செங்குந்தர்களுக்குள்ளே உயர்ந்தவராவார்.
(காதை- கதை, திறவோர்- ஆற்றலுடையோர்)
"தாயுமிலி தந்தையிலி தான் தனியன் காணேடி" என்று சிவபெருமானை மணிவாசகர் கூறியுள்ளார். சிவபெருமானுக்குத் தாய், தந்தை இல்லை என்பதனால் அவர் பிறப்பற்றவராகிறார்.

13. காங்கேயர்

மடம்பெறு மாந்தர் மருள்தீர மண்டல மாண்புருடன்
இடம்பெற ஓங்கும் உரிச்சொல் நிகண்டை இனிதுரைத்துக்
குடம்பெற மாமுனி ஒப்பத் தமிழைக் குவலயத்தில்
திடம்பெற வைத்த திறவோர் செங் குந்த சிலாக்கியரே.

பொழிப்புரை:-

அறியாமையை உடைய மக்களின் மயக்கம் தீருமாறு உலகமாகிய பெருமை உடைய விராட்புருஸன் தன்னிடம் ஏற்று உயரும் "உரிச்சொல் நிகண்டு" என்னும் அகராதி நூலை இனிமையாக எடுத்துக் கூறி, கும்பத்தில் தோன்றிய அகத்தியர் முனிவர் போல உலகில் தமிழை நிலைபெறச் செய்த வல்லமையுடைய காங்கேயர் செங்குந்தர்களுக்குள்ளே உயர்ந்தோராவர். "அபிதான சிந்தாமணி"யில் இவரது வரலாற்றினைக் காணலாம்.
(மடம்- அறியாமை, மருள்- மயக்கம், உரிச்சொல்- குணத்தை விளக்கும் பதம், குடம் பெறுமாமுனி- அகத்தியர், மாண்புருடன்- விராட்புருஸன்)

14. பொய்யாமொழிப் புலவர்.

உரமசைத் தார்கலி சூழ்புலி ஆளும் உசிதன் முன்னாள்
கரமசைத் தார்ப்பப் புனலமிழ் சங்கக் கவின்பலகை
வரமசைத் தும்பர் வயங்கவும், மற்றதில் வாழ்புலவர்
சிரமசைத் தொன்றவும் வைத்தோர் செங் குந்தசிலாக்கியரே.

பொழிப்புரை:-

தன்(தோள்)வலிமையினால் கடல் சூழ்ந்த உலகை ஆளுகின்ற (வணங்காமுடிப்) பாண்டியன் முற்காலத்தில் கைகளை அசைத்து ஆரவாரம் செய்யுமாறு தண்ணீரில் மூழ்கியிருந்த சங்கப் பலகை மேலெழுந்து தோன்றவும் மேலும் சங்கத்தில் (சிலை வடிவம்) இருந்த புலவர்கள் தம் தலைகளை அசைத்து ஒன்று சேரவும் செய்தவர் பொய்யா மொழிப் புலவர் இவர் செங்குந்தர்களுக்குள்ளே உயர்ந்தவராவார்.

(உரம்- வலிமை, ஆர்கவி- கடல், உசிதன்- பாண்டியன்)

குறிப்பு:- பொய்யாமொழிப் புலவர் தொண்டை நாட்டு செங்கோட்டத்து உறையூரில் பிறந்தவர் வயிரபுரத்தில் கல்வி பயின்று வருகையில் காளியருளால் கவிபாடும் திறமையும் வாக்குப் பலிதமும் பெற்றவர் இவருடைய ஆசான் "பொய்யா மொழியாய் இரு" என்று வாழ்த்த அதுவே தனது பெயராக வாழ்ந்தவர். ஒரு சமயம் பாண்டி நாடு சென்று, அங்கு அரசாண்டிருந்த வணங்கா முடிப் பாண்டியனை கோயிலில் கண்டு, அவன் மேல் கவிபாடவும் அவன் புலவரை மதியாது அக் கோயிலில் சிலை வடிவிலிருந்த நாற்பத்தொன்பது பேரும் சிரக்கம்பம், சுரக்கம்பம் செய்யப் பாடுக. என்று கூறப் புலவரும்,

"உங்களிலே யானொருவன் ஒப்புவனோ ஒவ்வேனோ
திங்கள் குலனறியச் செய்யுங்கள்- சங்கத்தீர்
பாடுகின்ற செந்தமிழ்க்கென் பைந்தமிழும் ஓங்குமோ
ஏடெழுதார் ஏழெழுவீர் இன்று."

என்று பாட புலவர் நாற்பத்தொன்மரும் சிரமசைத்து ஏற்றனர், மீண்டும் பாண்டிய மன்னன் புலவரை நோக்கி, அங்குப் பொற்றாமரைக் குளத்தில் அமிழ்ந்த சங்கப் பலகை மிதக்கப் பாடுக எனப் புலவரும்,

"பூவேந்தர் முன்போல் புரப்பார் இலையெனினும்
பாவேந்தர் உண்டென்னும் பான்மையால்- கோவேந்தன்
மாறன் அறிய மதுரா புரித்தமிழோர்
வீறணையே சற்றே மித."

என்று பாடினர். எக் காலத்திலோ அமிழ்ந்த சங்கப் பலகையும் வெளியில் தோன்றியது என்பது வரலாறு.

15. பகழிக் கூத்தர்

புதைந்தோட மாயேந் திரமன்று செற்ற புனிதன் வினை
வதைந்தோட யார்க்கும்பிள் ளைத்தமி ளோதென வாய்மலர்ந்தே
பதைந்தோடப் பாவலர் பாடும் பத்தவர் பாடுகுன்றிச்
சிதைந்தோடச் செய்திற வோர்செங் குந்த சிலாக்கியரே.

பொழிப்புரை:-

வீரமகேந்திரபுரி மண்ணில் புதைந்து அழியுமாறு முன்பு போரிட்ட முருகப் பெருமான் அனைவருக்கும் தீவினை நீங்கி ஓடும்படி தன்மீது பிள்ளைத் தமிழ் பாடுமாறு திருவாய் மலர்ந்து கூற அவ்வாறே வினை நீங்குமாறு ( திருச் செந்தூர் மீது பிள்ளைத் தமிழ்) பாடிய ஆற்றலுடையவர் பகழிக் கூத்தர் இவர் செங்குந்தர்களுக்குள்ளே உயர்ந்தோராவார்.

(செற்ற- அழிந்த, பாடுகுன்றி- வருத்தம் குறைந்த)

16. இரட்டைப் புலவர்.

அத்தை மகன்குரு டம்மான் மகன்மு டமாகிக் கீழ்மேல்
ஒத்துறைத் தேகூறு பாடோ(டு) அணிகொள் உலப்பில்கலி
முத்தரில் ஓதுவ கம்பர் உலாமுன் மொழிந்தரும்
சித்தம் உவப்பத் திரிந்தோர் செங் குந்த சிலாக்கியரே.

பொழிப்புரை:-

குருடராகிய அத்தை மகன் முடவராகிய அம்மான் மகன் என்றும் இருவரும், குருடர் முடவரைத் தாக்கி நடக்க முடவர் மேலிருந்து வழிகாட்ட இருவரும் ஒற்றுமையாக வாழ்ந்து, ஒரு பாடலின் முன் பகுதியை முடவர் பாடுவது, பின்பகுதியைக் குருடர் பாடுவது என்ற பாகுபாட்டுடன் அழகிய அழியாத பாடல்களை இயற்றி எல்லோரும் மனம் மகிழுமாறு கவிவல்லவர்களாக உலவி வந்த இரட்டைப் புலவர் செங்குந்தர்களுக்குள்ளே உயர்ந்தோராவர்.

(ஒத்துறைந்து- சேர்ந்துவாழ்ந்து, உலப்பில் கவி- அழியாப் பாடல்)

17. படிக்காசுப் புலவர்

புகழ்பூத் திடுந்தில்லை மேலோனை அம்மையைப் போற்றி எங்கும்
இகழ்பூத் திடாதபொற் காசைப்பஞ் சாக்கரத் தின்படிமேல்
நிகழ் பூத்தல் பெற்றுப்புள் வேளூர்க் கலம்பக நீட்டியறாத்
திகழ்பூத்து நின்ற செய்வோர்செங் குந்த சிலாக்கியரே.

பொழிப்புரை:-

புகழ் மிக்க தில்லை நடராசப் பெருமானையும், சிவகாமி அம்மையாரையும் வணங்கி எவ்விடத்தும் குறைவு வராத பொற்காசுகளை நாள்தோறும், நடராச மூர்த்தியின்

பஞ்சாக்கரத்திருப்படியில் பெற்று, புள்ளிருக்குவேளூர்க் கலம்பகம் என்ற நூலை இயற்றி நீங்காப் புகழ் பெற்று நின்ற செயலோர் செங்குந்தர்களுக்குள்ளே உயர்ந்தவராவர்.

(சுமார் இற்றைக்கு நாநூறு ஆண்டுகட்குமுன் தொண்டை நாட்டில் உள்ள பொன் விளைந்த களத்தூரில் செங்குந்த மரபில் தோன்றிய இவர் தொண்டை மண்டல சதகம், புள்ளிருக்கு வேலூர்க் கலம்பகம் ஆகிய நூல்களை இயற்றியவர். தில்லைப் பெருமான் கோயில் பஞ்சாக் கரப்படியில் பொற்காசுகள் பெற்றதால் படிக்காசுத் தம்பிரான் என்னும் பெயர் பெற்றவர்- அபிதான சிந்தாமணி)

(இதழ் பூத்திடா- இகழ்ச்சி இல்லாத(குறைவுவராத) பஞ்சாக்கரப்படி- தில்லைக்கூத்தப் ருெமானின் திருமுன்பு உள்ள ஐந்து படிகள்)

18. கச்சியப்ப முனிவர்

மேனாள் வழுவூர் மறைநாத ருட்பஞ்சம் வீட்டில் பின்னோன்
மானாரை வேட்கும் அவர்பால் உதித்துக், கைம் மாமுகவன்
ஆனாத காதை அகிலத் தவர்தொழ ஆய்ந்துரைத்த
தேனார் கிளவிப் புலவோர் செங் குந்த சிலாக்கியரே.

பொழிப்புரை:-

முன்னொரு காலத்தில் வழுவூரில் வாழ்ந்திருந்த மறை யோதும் அந்தணர்களின் வறுமையைப் போக்கி அவர்களின் மரபில் தோன்றிய பெண்களைத் திருமணம் செய்து கொண்டு வாழ்ந்தவர்களின் வழியில் பிறந்து கல்வி கேள்விகளில் சிறந்து, விநாயகர் பெருமானுடைய அழியாத வரலாற்றினை உலகினர் வணங்குமாறு ஆராய்ந்து (விநாயகர் புராணம் என்ற நூலாக) உரைத்த தேனை நிகர்த்த சொல்லை உடையவர் கச்சியப்ப முனிவர். இவர் செங்குந்தர்களுக்குள்ளே உயர்ந்தவராவார்.

(மேனான்- முற்காலத்தில், வீட்டி- அழித்து, வேட்டல்- திருமணம் கொள்ளல், ஆனாத- அழியாத)

19. பிறசை அருணாசல சுவாமிகள்

எட்டும் இரண்டும் எண்ணீராது தத்துவத் தேதயங்கி
ஒட்டியும் ஒட்டா ஒருபொருளைச் சுட்டி ஓர்வையெல்லாம்
வெட்டி விளக்குநல் வேதாந்த சாகை விரித்திடும்வா
சிட்ட உரைமுனான் செய்தோர் செங் குந்த சிலாக்கியரே.

பொழிப்புரை:-

ஆகார உகாரம் சேர்ந்த "ய" கரத்திலும் தொண்ணூற்றாறு தத்துவங்களிலும் ஒளி பெற்று பதிந்து அதில் ஒன்றுபட்டும் வேறாகியும் உள்ள ஒப்பற்ற பரம்பொருளான இறைவனைக் குறித்துச் செய்யப்படும் ஆராய்ச்சியெல்லாம் தடைவிடைகளால் விளக்குகின்ற

வேதாந்தப் பிரிவுகளை விபரித்துக் கூறும் ஞான வாசிட்டம் என்னும் நூலுக்கு உரையை முற்காலத்தில் செய்த அருணாசல சுவாமிகள் செங்குந்தரில் உயர்ந்தவராவார்.

(தயங்கி- ஒளிபெற்று, சுட்டி- குறித்து, ஓர்வு- ஆராய்ச்சி, சாகை- உட்பிரிவு).

வாழ்த்து

ஆவாழி வாழி அந்தணர் அருமறை ஆதரிக்கும்
கோவாழி வாழிசெங் குந்த சிலாக்கியம் கூறிடு(ம்) அம்
பாவாழி வாழி அனுபகர் வோர்உறும் பான்மைமிகும்
கூவாழி வாழிய வாழிஅ ரோஇசை கூர்தரவே.

பசுக்கள் (நன்கு) வாழ்வதாக மறையவர்களும் அவர்களை ஆதரிக்கும் அரசனும் நன்கு வாழ்வார்களாக செங்குந்தரில் உயர்ந்தோரைப் பற்றிச் சொல்லுகின்ற அழகிய நூல் வாழ்வதாக, இதனை பாராயணம் செய்வோர் வாழுகின்ற சிறப்புடைய இடங்கள் வாழ்வதாக, புகழ் மிகப்பெற்று அனைவரும் நிலைத்து வாழ்வராக:
(கூ- பூமி, கூர்தல்- மிகுதல், இசை- புகழ்)

# 9. கல்வெட்டுக்கள் கூறும் செங்குந்தர் சமூகச் சிறப்புக்கள்

தற்போது அச்சுப் பிரதிகள் செய்யும் சேவைகள் அனைத்தையும் முற்காலத்தில் பனை ஓலையால் தயாரிக்கப்பட்ட ஏடுகளே செய்தன. இவை ஏட்டுச் சுவடிகள் எனப்பட்டன. தற்போதும் புராணப்படிப்புக்கள் அனைத்தும் ஏட்டுச்சுவடிகளில் இருந்தே படிக்கப்படுவதை நாம் காணக்கூடியதாக உள்ளது. இன்றும் சிறார்களின் ஆரம்பத்தை ஏடு தொடக்கம் என்னும் பதத்தாலேயே பயன்படுத்துகிறோம்.

ஓலைச் சுவடிகளில் எழுதிப் பாதுகாக்க முடியாதவையும், நீண்ட காலம் நிலைத்து நிற்கப்பட வேண்டியவையும், காலத்தால் அழிந்து போகக் கூடாதவையுமான மிக முக்கியமான செய்திகள், அவற்றின் பெறுமானம், பிந்திய சமூகத்தவர்கள் கட்டாயம் அறியவேண்டியவை ஆகிய செய்திகள் செப்பேடுகள். கல்வெட்டுக்களில் பொறிக்கப்பட்டன. பல முக்கிய செய்திகள் பொறிக்கப்பட்ட செப்பேடுகள் அவற்றின் பெறுமதி தெரியாமல் அவற்றை வைத்திருந்தவர்களால், பழைய செப்பு விலைக்கு விற்கப்பட்டு அவை பாத்திரங்களாக மாற்றப்பட்டுவிட்டன. என ஆய்வாளர்களால் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு ஆய்வு செய்தவர்களில் ஒருவரான "தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழக கல்வெட்டுத் தொல்லியல்துறை

முன்னாள் தலைவர் புலவர்.செ.இராசு எம்.ஏ.பி..எச்.டி அவர்களால் ஆராய்ந்து தொகுக்கப்பட்ட "செங்குந்தர் வரலாற்று ஆவணம்" என்னும் நூலில் பாரத நாட்டின் பல இடங்களில் உள்ள கல்வெட்டுக்களில் உள்ள செய்திகள் சுருக்கமாக இங்கே காட்டப்பட்டுள்ளது.

ஒரு பூர்வீக சமூகத்தின் உண்மை வரலாற்றை பல கல்வெட்டுக்கள், செப்பேடுகள், ஓலைச் சுவடிகளில் இருந்து வெளிக் கொணர்ந்துள்ளார். புலவர் செ.இராசு அவர்கள். கயிலயங் கிரியில் திரு முருகன் அவதாரத்தின் போது, சிவன் அருளால் அவதார புருஸர்களாக அவதரித்த வீரவாகு தேவர் முதலிய நவவீரர்களின் மரபில் தோன்றியவர்கள் செங்குந்தர்களாவர். இவர்களே கைக்கோளர்கள் எனவும் அழைக்கப்படுகின்றனர்.

## செங்குந்தர் உற்பத்தி

இவர்கள்(தெய்வ பக்தியில் சிறந்து விளங்குபவர்கள் எனவும்) கைலயங்கிரியில் திருமுருகன் அவதாரத்தின் போது நவசக்திகளான மாணிக்கவல்லி, முத்துவல்லி, கோமேதக வல்லி, வைடூரியவல்லி, வச்சிரவல்லி, மரகதவல்லி, பவளவல்லி, நீலவல்லி, புட்பராகவல்லி முதலிய நவசக்திகளின் பால் சிவபிராணின் அருள்பார்வையினால் கர்ப்பவதிகளாகி, உமையின் சாபத்தால் நீண்டகாலம் கர்ப்பத்தை சுமந்து, சிவபிரானின் வேண்டுதலுக்கமைய உமையம்மையாரின் சாபவிமோசனத்தால் முறையே வீரவாகு தேவர், வீரகேசரி, வீரமாமகேந்திரன் என்போரும் வீரமார்த்தாண்டன், வீராந்தகன், வீரதீரன் வீரமாமகேச்சுரன், வீரதீரப் பராக்கிரமசாலிகளான நவசக்திகளின் உந்திக் கமலத்தின் வழியே அவதரித்தனர். இவர்கள் தேவலோகத்தில் தேவர்களோடு சமமாக மதிக்கப்பட்டனர்.

இவர்கள் பின்னர் முருகப்பெருமானின் வேண்டுதலின்படி முசுகுந்தனுக்கு படைத்துணைவர்களாக பூலோகத்தில் மானிடர்களாகத் தோன்றினர். இவர்களது மரபில் தோன்றியவர்களே செங்குந்தர்கள் என கச்சியப்பர் தமது கந்தபுராணத்தில் விரிவாகக் கூறியுள்ளார். மேலும் கச்சியப்பர் அவர்கள் உமையம்மையாரால் கொடுக்கப்பட்ட செவ்விய குந்தமான ஈட்டியினை கையில் ஏந்தியவர்களாதலால் செங்குந்தர்கள் எனப் பெயர் பெற்றனர் எனவும், அம்மை அப்பனைத் தாய்தந்தையர்களாகவும், முருகப் பெருமானை அண்ணனாகவும் மகா விஸ்ணுவுக்கு மருகராகவும் உள்ளவர்கள் எனவும் தமது கந்த புராணத்தில் கூறியுள்ளார்.

# கல்வெட்டுக்கள் கூறும் செங்குந்தர் வரலாறு

செங்குந்த சமூகத்தின் வரலாற்றை நாம் பின்னோக்கிப் பார்க்கும் போது ஆயிரத்து நூறு வருடங்களுக்கு முன்னே, பிற்காலச் சோழ, பாண்டிய பேரரசுகள் எழுச்சி பெறுவதற்கு முதற் காரணமாக விளங்கிய போர்ப் படைகளில் முக்கிய பதவிகளை வகித்தவர்கள் செங்குந்த வீரர்களே. இவற்றை விட நாயன்மார், ஆழ்வார்கள் காலங்களில் பக்தி இயக்கம் பெருகி கோயில்கள் உருவாகி வளர்ந்த போது அவற்றைக் கட்டிக் காத்த சமூகத்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் செங்குந்தர்களே.

உழவுத் தொழிலுக்கு அடுத்தபடியாக பெரும் அளவில் நெசவுத் தொழிலை வளர்த்து, மக்கள் மானம் காக்க உடை அளித்த ஒரே ஒரு சமூகம் செங்குந்தச் சமூகமேயாகும். இத் தொழிலில் கிடைத்த வரிகள் மூலம் அரசின் செல்வப் பெருக்கத்திற்கு காரணமாக அமைந்துள்ளனர். தமிழகத்தில் இருபத்தைந்திற்கும் மேற்பட்ட மாவட்டங்களில் உள்ள கோவிற் சுவர்களிலும் ஏனைய இடங்களிலும் உள்ள கல்வெட்டுக்கள் மூலம் காணமுடிகிறது. இவற்றை விட புதுச்சேரி மாநிலம் , ஆந்திர மாநிலங்களிலும் இவர்களைப் பற்றிய கல்வெட்டுக்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இயற்கைக் காரணிகளாலோ வேறு காரணங்களினாலோ அழிந்து போகக் கூடாதவைகளான மிக முக்கியமான செய்திகள் கற்களில் பொறிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு செங்குந்தர்கள் செய்த மறக்கமுடியாத செய்திகளை ஆங்காங்கு பல்வேறுபட்ட இடங்களில் கற்களிலும், செப்புத் தகடுகளிலும், ஓலைச் சுவடிகளிலும் செப்பேடுகளிலும் முன்னோர் பதிவு செய்தனர்.இவை பின்னர் அழிந்தும், அழிக்கப்பட்டும் விட்டன. என ஆய்வாளர் மூலம் அறிய முடிகிறது.

" நல்லார் ஒருவருக்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப் போல் காணுமே"

என்று கல்லில் எழுதப்பட்ட செய்தியின் பெருமையினைக் கூறியுள்ளார்கள்.

தமிழ் நாட்டில் செங்குந்தர்கள் செறிந்து வாழ்ந்தவர்கள் என்பதை அந்தந்த இடங்களில் கண்டெடுக்கப்படும் கல்வெட்டுச் சான்றுகள் எமக்குச் சான்று பகர்கின்றன. அந்த வகையில் எங்கெங்கு எத்தனை கல்வெட்டுச் சான்றுகள் இதுவரை கண்டெடுக்கப்பட்டுள்ளன என்பதைத் தருவது பொருத்தமுடையதாகும்.

1. திருப்பூர் மாவட்டம்- 07
2. ஈரோடு மாவட்டம் - 07
3. கடலூர் மாவட்டம் - 07

4. கரூர் மாவட்டம் - 02
5. காஞ்சிபுரம் மாவட்டம்- 15
6. கிருஸ்ணகிரி மாவட்டம்- 01
7. கோயமுத்தூர் மாவட்டம் - 01
8. சிவகங்கை மாவட்டம் - 04
9. சென்னை மாவட்டம் - 03
10. சேலம் மாவட்டம் - 06
11. தஞ்சாவூர் மாவட்டம் - 22
12. தருமபுரி மாவட்டம் -01
13. திருச்சிராப்பள்ளி மாவட்டம் - 06
14. திருநெல்வேலி மாவட்டம் -04
15. திருவண்ணாமலை மாவட்டம் - 08
16. திருவள்ளூர் மாவட்டம் - 03
17. திருவாரூர் மாவட்டம் - 03
18. தூத்துக்குடி மாவட்டம் - 02
19. தேனி மாவட்டம் - 01
20. நாகப்பட்டினம் மாவட்டம் - 10
21. நாகப்பட்டினம் மாவட்டம் - 10
22. புதுக் கோட்டை மாவட்டம் - 23
23. பேரம்பலூர் மாவட்டம் - 03
24. விருதுநகர் மாவட்டம் - 02
25. மதுரை மாவட்டம் - 07
26. விழுப்புரம் மாவட்டம் - 11
27. வேலூர் மாவட்டம் - 03
28. தேவனூர் மாவட்டம் - 04
29. புதுச்சேரி மாவட்டம் - 04
30. ஆந்திர மாநிலம் - 04.

இக் கல்வெட்டுக்கள் அனைத்தையும் அவ்வாறே பதிவு செய்து அவற்றை மற்றையோரும் படித்து அறிந்து கொள்ளக் கூடிய வகையில் அழகாக விபரித்துக் கூறியுள்ளார். திரு.செ.இராசு அவர்கள் தமது "செங்குந்தர் வரலாற்று ஆவணங்கள் " என்னும் நூலில், இந் நூலைப் படித்துவாழ்த்துரை எழுதிய பல அறிஞர்களும் அவர்களது முயற்சியினைப் பெரிதும் பாராட்டி உள்ளனர். இவர்களில் சென்னை உயர்நீதி மன்ற தலைமை நீதிபதியாக இருந்த திரு.எஸ் ஜெகதீசன் அவர்கள் செங்குந்தர் அவர்களின் வீரதீரச் செயல்கள், நம்பிக்கைக்குரிய சான்றான்மை, கோயில் திருப்பணிகள், சமூதாயப்பணிகள் இலக்கியசிறப்பு, அழகுக் கலை வளர்த்தல், திருக் கோயில் நிர்வாகம், தர்மச் செயல்கள் போன்ற இச்சமூகத்தவர்களின் பல்வேறுபட்ட சிறப்புக்களையும் ஒன்று விடாமல் தேடிக் கண்டு பிடித்து தொகுத்து வழங்கியுள்ளார். இந் நூலாசிரியர். என இந் நூலுக்குரிய அணிந்துரையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், செங்குந்த மரபினரின் சமூக. அரசியல், பொருளாதாரம், சமய, கலை, கொடை, வீரம் முதலிய வரலாற்றுச் சிறப்புக்களை எடுத்துக் காட்டும் செப்பேடுகள், ஓலைச் சுவடிகள் பின்வருமாறு:

1. நாவினால் மழுவெடுத்த ஞானப்பிரகாசர் செப்பேடு
2. அலைவாய் மலைச் செப்பேடு
3. அநுமான் புள்ளி செங்குந்தர் பட்டயம்
4. செங்குந்தர் வெற்றிப் பட்டயம்.
5. இடங்கைச் செங்குந்தர் பட்டயம்.
6. வேலூர் தலைப்பலிச் செப்பேடு.
7. செங்குந்தர் வடமலாயி பட்டயம்.
8. வீரவாகு தேவர் சமயச் செப்பேடு
9. மோரூர் காங்கேயர் ஏடு.
10. நாட்டு நியாய ஏடு.
11. சோழர் பூர்வபட்டயத்தில் செங்குந்தர்.
12. திருச் செங்கோட்டுத் திருப்பணி மாலையில் செப்பேடு.
13. கொங்கு வரலாற்று ஆவணங்களில் செங்குந்தர்.
14. அவிநாசித் திருப்பணிப் பட்டயம்.

நாவினால் மருவெடுத்த ஞானப் பிரகாசர் தமது சமூகத்தவர்களின் வீரம் , பெருமை முதலிய சிறப்புக்களை விளக்கி "கந்த புராணம்" என்னும் நூலை எழுதியுள்ளார். இது கச்சியப்ப முனிவர் இயற்றிய கந்தபுராணத்திலும் வேறானதாகும். இந்நூலைப் பாடியமைக்காக கொங்கு எழுபத்து இரண்டு நாட்டுச் செங்குந்தர்கள் இவருக்குச் செய்த சிற்ப்புக்கள் "நாவினால் மழுவெடுத்த ஞானப் பிரகாசர் செப்பேடு" என்னும் செப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 10. செங்குந்தர் மரபு விளக்கம்

இங்கே மாகறல் கார்த்திகேய முதலியாரால் இயற்றப்பட்ட செங்குந்தர் மரபு விளக்கம் " என்னும் பகுதியும் , நரசிங்கபுரம் வீரசாமி முதலியார் அவர்களால் இயற்றப்பட்ட சேனைத் தலைவர் மரபுவிளக்க சூறாவளி" என்னும் பகுதியும் கூறப்பட்டுள்ளது.

வீரவாகு தேவருடன் தோன்றிய செங்குந்தர்கள் முருகப் பெருமானுடைய படைக்குத் தலைமை பூண்ட காரணத்தினாலும் செங்குந்தர்களில் பலர் சோழமன்னர்களுடைய சேனைக்குத் தலைமை பூண்டு ஒழுகிய காரணத்தினாலும் இவர்கள் "சேனைத் தலைவர்கள்" என்றும், இவர்தம் மரபு சேனைத் தலைவர் மரபு என்றும் வழங்கப் பெற்றது.

## செங்குந்தர் மரபு விளக்கம்

காஞ்சி புரத்தில் உள்ள கச்சபேசர் திருக் கோயில் செங்குந்த மரபினருக்குரியது. கச்சபேசருக்கு காப்புச் செய்யுள் இயற்றிய இந் நூலாசிரியர் ஆளுடைய பிள்ளையாருக்கும் காப்புச் செய்யுள் இயற்றியுள்ளார்.

### விநாயகர் காப்பு

வாசவளம் தன்னாலும் மாசவளம் தன்னாலும்
தேசவளம் செய்கின்ற செங்குந்தர்- நேசவளம்
பாவளம் பெற் றோங்கப் பணைவளங்கொள் கச்சியில்தந்
தாவளம் பொன் வண்மை தரும்.

### கச்சபேசர்

வள்ளற்செங் குந்தர் மரபுவிளக் கம்செயஎன்
உள்ளத்தில் ஓங்கி ஒளிருமே – கள்ளமிலா
நங்கச்ச பேசன் நலம்பொழிவான் நன்னேசன்
தங்கச்ச பேசன் சரண்.

(கச்சபேசம்- காஞ்சிபுரம்)

01. தாரணி மூன்றும் நடுங்குமொர் வீரனைத் தாம்வெலற்குப்
பேரணை ஏறிய வீரம் தெரிந்த பெருமையினால்
வீரணத் தேரி எனப்பெறில் செங்குந்தர் வீரங்களில்
ஓரணு வேனும் உரைவன்மைத் தோவிவ் வுலகமே.

பொழிப்புரை:-

மூவுலகங்களும் அஞ்சுகின்ற வீரனாகிய வல்லான் என்பவனை வெல்லுவதற்கு, அவனுடைய இருப்பிடத்திற்கே சென்ற செங்குந்தர்களது வீரத்தினை விளக்குகின்ற பெருமை உள்ளதால், அந்த ஏரி "வீரணாத்தேரி" என்றே பெயர் பெற்றது என்றால் செங்குந்தர்களது வீரச் செயல்களில் ஓர் அணுவளவாவது எடுத்துரைக்கும் வல்லமையை இந்த உலகத்தில் உள்ளவர் உடையவரோ (இலர்)

(ஆணை- இருக்கை, இருப்பிடம், தெரித்தல்- சொல்லுதல்)

02. நீரொட்டும் கோட்டையில் வல்லானை வென்ற நெறி உரைப்பக்
கூரொட்டும் வாள்கொண்டளவில் சென்னி கொடுத்தருளிப்
பேரொட்டக் கூத்தன தீட்டி எழுபது பெற்றிருக்கும்
சீரொட்டும் செங்குந்தர் மாட்சியை யாவர் சிதைக்குனரே.

பொழிப்புரை:-

நீரால் சூழப்பட்ட கோட்டையில் வாசம் செய்த (கொடிய) வல்லான் என்பவனை வெற்றி கொண்ட தன்மையை எடுத்துக் கூறுவதற்கு விலையாக கூர்மை மிக்க வாளைக் கொண்டு அளவற்ற தலைகளை வெட்டிக் கொடுத்து ( அத் தலைகள் மீளச் சென்று அந்தந்த உடம்பில் ஒட்டப் பாடியதனால்) ஒட்டக் கூத்தர் எனப் பெயர் பெற்றவர் பாடிய ஈட்டி எழுபது என்னும் நூலைத் (தங்கள் பெருமைக்கு ஆதாரமாக) பெற்றிருக்கும், புகழ் படைத்த செங்குந்தர்களது சிறப்பை யாரால் அழிக்க இயலும்.

(அளவில் சென்னி- அளவற்ற தலைகள், சீர்- புகழ், மாட்சி- பெருமை)

03. பொன்பொதி கொன்றை உமையார் சிலம்பிற் புடைபெயந்த
ஒன்பது வைரத்தில் ஒன்பது பெண்வழி ஒன்பதின்மர்
என்பதும் அன்னோர் வழிவீரர் என்பதும் என்னவென
மன்பதை சோரத் தலைதந்த செங்குந்தர் வைரம் நன்றே.

பொழிப்புரை:-

பொன்போலும் நிறமமைந்த கொன்றை மாலையணிந்த சிவபெருமானின் இடப்பாலுள்ள உமாதேவியின் திருவடிச் சிலம்பிலிருந்து வெளிப்பட்ட ஒன்பது மணிகளில் தோன்றிய நவசக்திகளிடமாக உதித்தவர்கள் நவ வீரர் என்பதும் அவர்களின் வழித் தோன்றல்கள் செங்குந்தர்கள் என்பதும் ஒரு பெருமையோ என்று சொல்லும்படி இந்த உலகிலுள்ளோர் தளர்ச்சி அடையுமாறு தம் தலைகளை அரிந்து கொடுத்த செங்குந்தர்களது வீரம் உயர்ந்துள்ளது.

(புடைபெயர்ந்த- இடம் விட்டுச் சிந்திய, மன்பதை- மக்கள் உலகம் , வைரம்- வீரம்)

04. நாடுயர் காஞ்சிப் பெருநாட்டுச் செங்குந்தர் நன்கு நெய்யும்
ஆடை வளங்களை எல்லா றியானிங் கறைவனால்
பீடைசெய் ஊதையில் வெம்மை கொடுத்துப் பிணி தவிர்த்தும்
கோடை யுழைஉவர் நீர்கவர்ந் தின்ன குணந்தருமே.

பொழிப்புரை:-

நாடுகளில் உயர்ந்த காஞ்சிப் பெருநாட்டில் வாழ்கின்ற செங்குந்தர் நன்முறையில் நெய்தளிக்கும் ஆடைகளின் வளத்தினை நான் எவ்வாறு எடுத்துச் சொல்லுவேன். அந்த ஆடைகள் தம்மை அணிபவர்க்கு துன்பம் தரும். குளிர் காற்றில் வெப்பத்தைக் கொடுத்து நோயை நீக்கியும், கோடை காலத்தில் வியர்வை நீரை உறிஞ்சியும் பிற நன்மைகளையும் செய்யும்.

(பீடை- துன்பம், ஊதை – குளிர்காற்று, உவர்நீர் - வியர்வை)

05. வானம் வளரும் : பசுக்கள் வளரும்: மகம் வளரும்:
தானம் வளரும் : தருமம் வளரும்: தமிழ் வளரும்:
ஞானம் வளரும் : சிவஞான போத நலம் வளரும்:
மானம் வளர்கின்ற செங்குந்த ரெங்கும் வளர்தலினே.

பொழிப்புரை:
மானத்தைக் காக்கின்ற செங்குந்தர் எங்கும் வளர்ந்து வருதலினால், மழை அதிகரிக்கும். பசுக்கள் வளம் பெருகும். யாகம் வளரும்: தான தருமங்கள் அதிகமாகும். தமிழ் முதலாகிய அறிவு வளரும். சிவஞானமாகிய அறிவு பெருகி வளரும்.
(மகம் - யாகம்)

06 .தாயாரும் பன்னகன் மாணாக்கர் யாருந் தழைத்துவர
நேயரின் எண்ணி முகமே அகமே நெடிதலர்ந்தே
ஆயரு நூல்பல வாய்கொண் டுரைத்தலின் ஆன்றதந்து
வாயரென் றோர்பெயர் பூண்டனர் செங்குந்தர் மண்டலத்தே.

பொழிப்புரை:-
தாய்மார்கள் வலியுறுத்திச் சொல்ல, மாணவர்கள் அனைவரும் உடன்வர, அன்பர்கள் எண்ணி அகமும் முகமும் மலர்ந்து கேட்க, ஆராய்ந்து அறிவதற்கு அருமையான நூல்கள் பலவற்றைத் தம்வாயினால் எடுத்துச் சொல்வதனால் மாட்சிமைப்பட்ட "தத்துவாயர்" என உலகில் ஒரு பெயர் பெற்றவர்கள் செங்குந்தர்களேயாவர்.
(பன்னல்- சொல்லுதல், தந்து- நூல், தந்துவாயர்- நூல் உரைப்போர்).

07. சமைய விசேட நிருவாண தீக்கை தரித்தலுடன்
ஆமையபி டேகமும் பெற்றங் கவர்குலத் தாரியராய்
இமைய முதற்கொரு சேது வரைக்கும் மினிதுறைந்து
சிமைய விளக்கென யாண்டும் விளங்குவர் செங்குந்தரே.

பொழிப்புரை:-
மூன்றுவகைத் தீட்சைகளான சமயம், விசேடம், நிருவாணம் ஆகியவற்றுடன் ஆசாரிய அபிடேகமும் ஏற்றுக் கொண்டு, குலத்திற்குக் குருவாக விளங்கி, இமயம் முதல் சேது (இராமேஸ்வரம்) வரை எல்லா இடங்களிலும் இனிமையுடன் வாழ்ந்து மலை மேல்விட்ட விளக்குப் போல எங்கும் பிரகாசமாக விளங்குபவர்கள் செங்குந்தர்களேயாவர்.
(ஆரியர்- ஆசாரியார், இமையம்- மலை)

08. மூத்தவன் என்று முருகப் பிரானை முறைமைகொண்டிங்(கு)
ஏத்துவர் செங்குந்தர்: நீற்றொளி ஆசார மேற்றிருக்கும்
மாத்துவர் வைணவர் சைனர் முதலிய மற்றவரும்
நீத்தவர் போற்றரும் வைதீக சைவ நெறியினரே.

பொழிப்புரை:-

முருகப் பெருமானைத் தமையன் என்று உறவுகொண்டு துதிப்பவர்களாகிய செங்குந்தர்கள். திருநீற்றை விலக்குகின்ற ஒழுக்கமுடைய மாத்துவர்கள், வைணவர், சமணர் முதலிய பிற மதத்தவரும் துறவராயினும் அவர்களாற் போற்றுவதற்கு அருமையான வைதீகச் சைவ நெறியை மேற்கொண்டவர்கள்.

## 11.செங்குந்தர் குலமாட்சி

இது திருவாரூர் வள்ளல் திரு. தி. க.ச. சபாபதி முதலியார் அவர்களால் தொகுக்கப்பட்டுள்ளது. பலர் பல காலங்களில் இயற்றிய நூல்களில் செங்குந்தர் பற்றி வரும் குறிப்புகள் கொண்ட பாடல்களை இவர் இப்பகுதியில் தொகுத்து வெளிப்படுத்தியுள்ளார்.பல நூல்களில் இவ்வாதாரங்கள் இருந்த போதும் எல்லாவற்றையும் எடுத்துக் காட்ட முடியாமையால் சில நூல்களில் இருந்து எடுத்துக் காட்டப்பட்டவை இவையாகும்.

"பல நூலைக் காட்டப் பருவமிது அல்ல
சில நூலைக் காட்டுவோம் தேர்ந்து."

எனத் தொகுத்தாணுரை"யில் கூறப்பட்டுள்ளது.

மதுரைப் புராணம் (பெரும் பற்றுப் புலியூர் நம்பி)

01. சாம்பவி சிலம்பிற் பூத்த சாயலாம் மணியின் மாதர்
சாம்பவன் கருணை யாலே தந்தசெங் குந்த மாக்கள்
தேம்பொலி வீதி தன்னில் திருவல கியற்று வோர்கள்
வேம்பலர் மன்னன் போல மேதினி பிறந்து வாழ்வர்.

பொழிப்புரை:-

உமாதேவியின் திருவடிச் சிலம்பிலிருந்து தோன்றிய நவமணிகளில் உதித்த அவ்வம்மையின் சாயலைத் தம்மிடத்தே கொண்டு விளங்கிய பெண்களிடம் இறைவனது கருணையினால் தோன்றிய செங்குந்தர், தேன்போன்று இனிமையுடைய (திருக்கோயிலமைந்த) வீதிகளில் திருவலகிட்டுத் திருப்பணி செய்வார்கள். இவர்கள் வேப்பமலர் மாலையணிந்த பாண்டிய மன்னனைப் போன்று இவ்வுலகில் தோன்றி வாழுவார்கள்.

(செங்குந்தர் சோழமரபினராயினும் இந்நூல் மதுரைப் புராணமாதலின் பாண்டியனோடு ஒப்புமைப்படுத்தி கூறப்பட்டுள்ளது.)

02. உலத்தினிற் புட்பராகம் ஒளியினில் கதிராம். ஐந்து
புலத்தினிற் கருங்கண் வாவிப் பூவினிற் கமலம் சொல்லும்
குலத்தினிற் செய்ய குந்தம் குன்றினின் மேருக்குன்றம்
தலத்தினிற் மதுரை மேலாந் தரமெனுந் தகைமைத்தம்மா.

பொழிப்புரை:-

(ஒளி வீசும்) கற்களில் புட்பராகம் போலவும், ஒளியினில் சூரியன் போலவும், ஐம்புலன்களில் கண்கள் போலவும், குளத்திலுள்ள பூக்களில் தாமரை போலவும், மலைகளில் மேருமலை போலவும், நகரங்களில் மதுரையம்பதி போலவும், குலங்களில் உயர்ந்து நிற்பது செங்குந்த குலமேயாகும்.

(உலம்- திரண்டல், புலத்தினில்- ஐம்புலன்களில்- கதிர்- சூரியன், மேவாம்தரம்- மேலானதன்மை.)

03. கோக்களை மின்ன னாரைத் தவத்தரைக் குலத்தில் வேத
மாக்களைச் சிசுவைக் கொன்றான் செய்ந்நன்றி மறந்தான்.ஆசான்
ஆக்கம தழித்தான் பாவ மனைத்தும் செங் குந்தர்வீதி
தேக்கிடப் பிச்சை வாங்கி உண்டிடத் தீரு மன்றே.

பொழிப்புரை:-

பசுக்கள், பெண்கள், தவசிகள், வேதம்வல்ல அந்தணர்கள், குழந்தைகள் ஆகியவர்களைக் கொன்றவர்களும், பிறர் தமக்குச் செய்த நன்றியை மறந்தவர்களும் குருவின் செல்வத்தை அழித்தவர்களும் ஆகிய இவர்களுண்டய பெரும் பாவங்கள் எல்லாம் செங்குந்தர்கள் வாழ்கின்ற வீதியில் சென்று இரந்து சோறு உண்பதால் நீங்கிப் போகும்.

(மின்னனார்- பெண்கள், ஆக்கம்- செல்வம்)

## 2. போகர் ஜாதி உற்பத்தி நூல்

4. பண்பான புலிப்பாணி மைந்த கேளு
பகருகின்றேன் நவவீரர் வருக்கந் தானே
தண்பான சிவசக்தி சிலம்பில் தோன்றித்
தருவாக நந்திகணத் தவருமாகித்
திண்பான செங்குந்தர் வமிச மானார்
திடமுள்ள வளகுல மணமே சூட்டி
எண்பான சுதந்திர நூற்றெண்பான் பாலர்
இணங்கியே உலகிலர சியற்றி னாரே.

(இந் நூல் "போகர்" என்னும் சித்தரால் இயற்றப்பட்டதெனவும், அவர் "புலிப் பாணி" என்பவருக்குக் கூறினார் எனவும் வழங்கப்படுகிறது.)

பொழிப்புரை:-

நவவீரர் மரபினை நான் கூறுகிறேன். அதனைப் புலிப்பாணியே நீ கேட்பாயாக. சிவசக்தியின் சிலம்பின் மணிகளிலிருந்து அவதரித்து நந்திதேவர் வழியில் வந்து, கையில் குந்தப்படை ஏந்தியதனால் "செங்குந்தர்" என்று இவர்கள் வழங்கப்பட்டனர். சோழகுலத்தில் இவர்கள் மணம்கொண்டு இலக்கம் வீரர்களுடன் நவ வீரர்களும் இணைந்து உலகினை ஆட்சி செய்தார்கள்.
(வளவகுலம்- சோழர் மரபு)

3. கருவூரார் கடைக் காண்டம்

5. சாதியா மின்னுமொரு மார்க்கம் கேளு
சாங்கமுட னேஉரைப்பன் மைந்தா இன்று
ஆதியாம் வீரகே சரியாம் தேவர்
அன்பான பரிதிகுல சாதியாகும்
நீதியாம் சேனைக்குத் தலைவ ரென்று
நிட்களங்க மாகவல்லோர் நூல்கள் தோறும்
பாதியாம் சடையணிந்த தம்பி ரானும்
பாடிவைத்த நூல்தனிலே பார்க்க லாமே

பொழிப்புரை:-

சாதி என்னும் முறையை ஒழுங்காகக் கூறுகிறேன். கேட்பாயாக, வீரகேசரி முதலிய தேவர்கள் சூரிய குலத்தவர்கள் ஆவர். அவர்கள் நீதி முறையுடன் சேனைத் தலைமை ஏற்றவர்களாவர். அவர்களுடைய குற்றமற்ற தன்மைகளை சிவபெருமானைப் பற்றி பாடப்பட்டுள்ள நூல்களில் கண்டு தெளியலாம்.(வீரகேசரி என்பவர் நவவீரர்களில் ஒருவராவர்)
(சாங்கம்- ஒழுங்கு, நிட்டகளங்கம்- தூய்மை)

## அகத்தியர் மரபு நூல்

6. பாரப்பா இன்னுமொரு செய்தி கேளு
பண்பான புலத்தியனே பாங்கு ணோனே
சாரப்பா சண்முகருக் கிளையோ ரான
சருவாக சந்தியிட புதல்வ ரையா
தாரப்பா நந்திகணத் தவருமாகித்
தருவாக நவவீரர் மரபில் தோன்றி
வாரப்பா வீரசிங்க ராயன் தானும்
வளமான வீரசிங்கா சனத்தோன் பாரே.

பொழிப்புரை:-

புலத்திய முனிவரே, இன்னும் ஒரு செய்தியைக் கூறுகின்றேன். கேட்பீராக சண்முகப் பெருமானுக்கு இளையவராகவும், உமாதேவியாகிய சக்தியின் புதல்வராகவும், திரு நந்திதேவர் மரபில் வந்தவர்களாகவும் உள்ளவர்கள் நவவீரராவர். அவர்தம் மரபில் தோன்றி வீரத்துடன் சிம்மாசனம் ஏறிய வீரசிங்க ராயன் செங்குந்த குலத்தவனாவான்.(அகத்தியர் புலத்திய முனிவருக்குக் கூறியது)

## அகத்தியர் மரபு விளக்கம்

7. என்னவே இன்னுமொரு வழியும் சொல்வேன்
எழிலான கண்மணியே இசைவல் லோனே
நன்னவே நவவீரர் மரபு தானும்
நாம் கண்ட நாற்றிசையும் கீர்த்தி ஓங்கக்
கன்னவே கந்தவேள் கருணை யாலே
கனமான மனுகுலத்தில் கலந்த தாகும்
அன்னவே முசுகுந்தர்க்(கு) அவனி தன்னில்
அன்பாய்ச்சா மந்திரரா யிருந்தார் பாரே.

பொழிப்புரை:-

அழகிய கண்மணி போன்றவனும் இசையில் வல்லவனுமாகிய முனிவனே, இன்னமும் ஒரு முறைமையைக் கூறுகின்றேன். கேட்பாயாக! நவவீரர்களுடைய மரபானது எல்லாத் திக்குகளிலும் புகழ் பரப்பி, முருகப் பெருமானின் திருவருளினால் மனுகுலத்துடன் இணைந்து விட்ட மரபாகும். அதனாலேயே அவர்கள் இவ் வுலகில் முசுகுந்தச் சக்கரவர்த்திக்குப் படைத்துணைவர்களாக விளங்கினார்கள்.

(கனம்- பெருமை, சாமந்திரர்- படைத்தலைவர்)

8\. சதுர்மறை நாலி லில்லை சாத்திரம் ஆறில் இல்லை
பதினொன்பு ராணத் தில்லை பத்திரண் டெட்டி லில்லை
முதலியார் மூவர் சொல்லின் முனிமொழி குறளி லில்லை
உயிர்வதை செய்வ துண்ணல் செங்குந்தர் மரபுக் கில்லை.

பொழிப்புரை:-

நான்கு வேதம், ஆறு சாத்திரம், பதினெட்டுப் புராணம், இருபத்தெட்டு ஆகமம், மூவர் முதலிகள் பொழிந்த தேவாரம், திருவள்ளுவர் உரைத்த திருக்குறள் ஆகிய நூல்களில் விதிக்கப்படாத உயிர்க் கொலை செய்தல், புலால் உண்ணல் இவைகளைச் செய்யாமையே செங்குந்தர் பின்பற்றும் ஒழுக்கமாகும்.

காதிலே ஆறு கட்டிக் கையிலே வேலும் வாங்கி
வாதுசேர் அசுரர்மாள வந்ததோர் வீர வாகு
ஆதியும் அந்த மில்லா அரனுக்குக் குருக்களான
சோதியாம் முருகன் பின்னே தோன்றிய குந்தமாமே.

பொழிப்புரை:-

காதிலே உருத்திராக்க வடமணிந்து கையில் வேலை ஏந்தி போர்புரியும் அசுரர்கள் அழியாப் படை கொண்டு சென்ற வீரவாகுத் தேவர் , ஆதியந்தமில்லாத சிவபெருமானுக்கு (பிரணவப் பொருள் கூறிய) குருநாதனாகிய ஒளி பொருந்திய முருகப் பெருமானுக்கு பின்னே தோன்றிய செங்குந்தராவார்.)

(காதிலே ஆறுகட்டி என்பது ஆறு சிறு உருத்திராக்க மணிகளை வட்டமாகக் கோத்து காதில் அணிந்து கொள்வதைக் குறிக்கும்)

<u>ஸ்ரீ கந்த புராணம் (நாவினால் மழுவெடுத்த ஞானப் பிரகாசர்)</u>

முந்தவே கைலை வெற்பின் முயலு மெய்க் காவலாளர்
கந்தர்கைக் கோளராகிக் கார்நிறத் தசுரைச் செற்றுச்
சுந்தர முசுகுந் தற்குச் சுற்றமும் அமைச்சும் ஆன
குந்தர்கள் உறையும் வீதித் தன்மையைக் கூறுவோமால்.

பொழிப்புரை:-

கைலை மலையினை மெய்க் காவல் கொண்டு காத்து நின்று கந்தப் பெருமாளால் (தம்பியராகக்) கொள்ளப்பட்டு கருநிறம் பொருந்திய (சூரபதுமன் முதலிய) அசுரர்களை அழித்து அழகுடை முசுகுந்தச்சக்கரவர்த்திக்கு உறவினரும் அமைச்சர்களுமாகிப் பெருமை

கொண்ட செங்குந்தர் வாழுகின்ற தெருவின் சிறப்பினை எடுத்துக் கூறுவோம(வாணிக்க முடியாத சிறப்புடையது என்பதைக் குறிக்கும்

## திருவாரூர் லீலை

கண்டிடும் தவங்க ளெல்லாம் கந்தவேள் தனக்கே யாக்கி
எண்டருஞ் சிறப்பு வாய்ந்த இயன்முக குந்த மன்னன்
மண்டனிற் கொண்டு வந்த மாப்பெரும் வீரர் ஒன்பான்
கண்டியர் தம்மை முந்திக் கமலையில் வைத்தான் மாதோ.

பொழிப்புரை:-

பிறரால் மதிக்கப்படுகின்ற முசுகுந்த மன்னன் தன்வழிபாட்டினை முருகப் பெருமானுக்கே உரிமையாக்கி நிலவுலகிற்குத் தான் கொண்டு வந்த புகழ் மிக்க நவவீரர்களைத் திருவாரூரில் வாழச் செய்தான்.

(கண்டியர்- புகழுடையோர், கமலை- திருவாரூர்)

இப் பெரும் காரணத்தால் எழில் நவ வீரர் கூட்டம்
செப்பரும் சோழ நாட்டுத் திருப்பெயர் முதலில் பெற்றார்--
தப்பரும் கீர்த்தி கொண்ட சைவ செங்குந்தர் மேன்மை
எப்படி உரைப்பதாகும் என்றனன் சூதன் தானே.

பொழிப்புரை:-

இவ்வாறு திருவாரூரில் குடிவைத்த காரணத்தால் நவவீரர்களும் அவர்தம் மரபுகளோடு சோழநாட்டு முதலிகள் என்ற பெயரைப் பெற்றார்கள். குறைவில்லாத பெரும் புகழ் கொண்ட சைவர்களான செங்குந்தருடைய மேன்மையை எவ்வாறு எடுத்துக்கூற முடியும் என்று சூதமுனிவர் கூறினார்.

## 12. காஞ்சிபுரம்

காஞ்சிபுரம்- இது உயர்ந்த புகழுடைய நாடு என்பதைக் கூறுகின்ற பழம் பாடல்கள் “ஜாதி நூல் கோவை’ என்னும் நூலில் காணப்படுகிறது. என்றும் காஞ்சி என்னும் பெரு நாட்டின் கீழ், கிழக்கே “சிவபுரம்” பதினேழு கிளை நாடுகளைக் கொண்டும், தெற்கே “தொந்திபுரம்” பதினேழு கிளை நாடுகளைக் கொண்டும், மேற்கே “விரிஞ்சிபுரம்’ பதினேழு கிளை நாடுகளைக் கொண்டும், வடக்கே “சோழசிங்க புரம்” பதினேழு கிளை நாடுகளைக் கொண்டும் இருந்தன.

என்பதையும் இந்நாடுகளில் செங்குந்தர்கள் பல்வகைப்பட்ட சிறப்புக்களோடு வாழ்ந்தார்கள் என்றும் அறியக் கிடக்கின்றது.

1. பகர்வரை தனக்கெலாம் கைலைமலை பெரியது
   பட்சியில் பெரிது கருடன்
   படையென்ற வாளியில் பாசுபத மேபெரிது
   பண்பில் பெரிது தங்கம்
   அருமறை உணர்ந்திடச் சதுர்முகன் பெரியவன்
   அண்டருக் கோ இந்திரன்
   ஆழிக்கு முகில்வண்ணன் பாற்கடல் பெரியது
   அரவுக்கு ஆதிசேடன்
   மருவுமத யானைக்கு வெள்ளானை பெரியது
   மணிக்கெலாம் பெரிது வைரம்
   மரமான தற்கெலாம் கற்பகத் தருபெரிது
   வளர்நதியில் கங்கை பெரிது
   விருதுவில் லுக்கரன் லில்லதே பெரியது
   மீனுக்கு மகரம் பெரிது
   மேதினி துதிக்கின்ற நாட்டினில் பெரியது
   வெற்றிபுகழ் காஞ்சிநாடே...

2. கச்சியெனும் மாநாட்டில் அளகனெனும்
   அரசிருக்கக் கண்டவீரன்
   கச்சியினாற் றிசைமுகத்தும் சிவபுரமும்
   தொந்திபுரம் நறுவிரிஞ்சை
   உச்சிதகோ ளிங்கபுர நாடொன்றுக்
   கொருபன்னே ழுள்ளநாட்டில்
   நிச்சயமாய்ச் சனகன்முதற் செங்குந்த
   மன்னவரை நேமித்தானே.

11. "ஈட்டி எழுபது" என்னும் நூலில் குறிப்பிடப்பட்ட வல்லானை வென்ற பன்னிரு செங்குந்த குல வீரர்கள்.

இவ் வரலாறு வல்லான் காவியம்- வீரநாராயணச் சருக்கம். வல்லான் காவியம்- தேவசாட்சிச் சருக்கம் என்னும் பகுதிகளில் இருந்து அறியப்பட்டவை.

1. பழுவூர்வீரன், 2. பழுவை நாராயணன்

இவ்விருவரும் பராந்தக சோழன் காலத்தில் பழுவூரை ஆண்டு வந்த கோமதி என்னும் அரசனுக்கு இரட்டைப் பிள்ளைகளாகத் தோன்றியவர்கள். இவர்கள் வீரநாராயணன் என்றே அழைக்கப் பெறுவர். இவர்கள் இராட்டிரகூடனாகிய வல்லான் என்பவனைத் தக்க

துணைவருடனும், மிக்க வீரத்துடனும் சென்று அவனை வென்று சோழநாட்டின் ஆட்சியை நிலை நிறுத்தியவர்கள்.

3 கட்சித் தனியன்.

இவன் காஞ்சிபுரத்தை அரசாண்ட பதுமவண்ணன் என்பவனுக்கு ஒரே மகன் இவன் நாட்டின் மீது படை கொண்டு வந்தனர். இவன் பகைவரை வெற்றி கொண்டு காஞ்சிமாவடி கீழ் தேவ சிங்காசனத்தில் இருந்து நீண்டநாள் அரசாண்டு, வல்லானை வென்று தோழர்களுடன் வீரசொர்க்கம் அடைந்தான்.

4 ஒற்றியூரான்

இவன் திருவொற்றியூரை அரசாண்டு வந்த சுதனகன் என்னும் அரசனுக்கு மகனாகத் தோன்றியவன். இவன் மாணிக்கத் தியாகருக்குத் தனியாக ஒரு நந்தவனம் அமைத்து அதிலிருந்து மலர்களைக் கொண்டு மூன்று வேளையும் பெருமானை அர்ச்சித்து வந்தவன் அந்நாளில் அனலன் என்னும் ஓர் அரசன் அந்தந்த வனத்தில் வந்து பல் உயிர்களுக்கும் துன்பம் செய்து கொண்டிருந்தான். அவனுடன் தன்கைக்குந்தத்தினால் குத்திக் கொன்று உலகத்திற்கு நன்மை செய்தவன்.

5 களந்தையரசன்

இவன் பொன் விளையும் களத்தூரை ஆண்டு வந்த மதிமான் என்னும் மன்னனுக்கு மூத்த மகனாகப் பிறந்தவன். எக்காலத்தும் நிலைக்கும் அணி உருத்திராக்க மாலை என்று அதனைத் தரித்து, நடராசப் பெருமான் திருவடிகளைத் திருவடியாகப் பெற்றவன். இவன் தந்தை மதிமான் இவனுக்கு முடிசூட்ட எண்ணி அரசர்களுக் கெல்லாம் திருமுகம் அனுப்பினான். காட்டுரான் என்னும் குறுநிலமன்னன் அதனை மதியாமல் இருந்து விட்டான். ஆதலால் கோபம் கொண்ட மதிமான் அவன் மேல் படை கொண்டு சென்று அவனை வெற்றி கொண்டு அவனையும் சபையில் கொண்டு வந்து இருத்தி மகனுக்கு முடிசூட்டி செங்கோலையும் கொடுத்தான்.

6 புற்றிடங் கொண்டான்

திருவாரூரில் வாழ்ந்த இவன் பெரும் செல்வம் உடையவன். இம் மன்னன் தமிழில் பெருவிருப்பம் உடையவன். பல புலவர்களால் புகழ்ந்து பாடப் பெற்றவன். வீதிவிடங்கப் பெருமானிடம் பக்தி கொண்டு நீதி தவறாமல் ஆண்டவன்.

இவன் புகழைக் கேள்வியுற்ற அங்கதேசத்தரசன் இவனிடம் வந்து கலிங்க நாட்டரசனால் தனக்கேற்படும் துன்பத்தைக் கூறி உதவி வேண்டினான். அது கேட்ட புற்றிடங் கொண்டான் கலிங்கமன்னனுக்குச் சமாதானமாகப் போகுமாறு ஓலை அனுப்ப, அவன் அதற்கு உடன்படாமல் போகவே அவன் மீது

படை கொண்டு வென்று அவன் நாடு முழுவதையும் தன்னையடைந்த அங்கதேசத்தரசனுக்கு கொடுத்துதவினான்.

7 கோளாந்தகன்

இவன் கொடுங்குன்றம் என்னும் தலத்தை ஆண்டு வந்த மதிநாதன் என்பவனுடைய மகனாவான். வேதசிவாகமங்களை நன்றாக ஓதி உணர்ந்து சிவபெருமானே தனிப்பெருந் தெய்வம் என்று உணர்ந்தவன். உலகத்தைக் காப்பாற்றும் பொருட்டு தனுர் வேதத்தில் கூறப்படும் வில்வித்தையை செவ்வையாகக் கற்றுத் தேர்ந்தவன். ஒரு முறை தன்னோடு மல்யுத்தம் செய்யுமாறு கேட்டு வந்த உணங்கன் என்னும் வடநாட்டு அரசனைப் புறங்காட்டி ஓடச் செய்து வெற்றி மாலை சூடியவன்.

8 புலியூர்ப் பள்ளி கொண்டான்

இச் செங்குந்த மன்னன் சிதம்பரம் என்னும் தலத்தினை ஆண்டு வந்த விடங்கன் என்பவனுடைய ஒரே மகன். எந்த நேரமும் வேலும் மயிலும் துணை என்று ஜெபம் செய்பவன். தில்லை நடராசப் பெருமானுடைய திருவனந்தல், காலைச் சந்தி முதலிய கட்டளைகளைச் செவ்வையாக நடைபெறச் செய்தவன்.

இவன் கனவில் நடராசப் பெருமான் தோன்றி, "ஆந்திநாட்டரசன் சிரத்தாமன் என்பவன் படை கொண்டு வந்து நகரத்தின் மதிலை முற்றுகையிட்டிருக்கிறான். நீ படையுடன் சென்று அவனை வெல்வாயாக" என்று உணர்த்தினார். அவ்வாறே அவனும் துயிலுணர்ந்து பெருமானை வணங்கி வெட்சி மாலை அணிந்து படை கொண்டு செல்ல ஆந்திர அரசன் இவனது வல்லமை கண்டு அஞ்சி ஓட அவனைத் துரத்திச் சென்று கொன்று தன்னாட்சியை வளம் பெற நடாத்தினான்.

9 பிணவன்

பிணவன் என்னும் மன்னவன் கடம்பூரை ஆண்டு வந்த கதம்பன் என்பவனுடைய தவப்புதல்வன் எந்நேரமும் சிவனையே தன் மனதில் நிறுத்தி, தன்னுயிர்போல் உலக உயிர்களை எண்ணுபவன் வேதாகமங்களை ஓதி உணர்ந்தவன். இவன் ஓர் நாள் பூஞ்சோலைகளின் வளப்பங்களைக் கண்டுவர குதிரையில் வெகு தூரம் சென்று ஒரு சோலையில் தங்கினான். அப்போது வேடராசன் ஒருவன் வேட்டையில் வீணாக உயிர்களைக் கொல்வதைக் கண்டு, அதனைக் கைவிடுமாறு கூறியும் அவன் கேட்காமையால் அவனுடன் போரிட்டு அவனைப் புறமுதுகு காட்டி ஓடச் செய்தான்.

10 கண்டியூரான்

அட்ட வீரத் தலத்தில் ஒன்றான திருக்கண்டியூரை அரசாண்ட விபுலன் என்னும் 'வேந்தனுடைய மகன் கண்டியூரன். இவன் மதுரையூரன் என்றும் கூறப்படுவான். கண்டியூருக்கு வடக்கிலிருந்த ஒரு காட்டில் பிரமராக்சதன் என்னும் ஒரு கொடியவன் இருந்தான்.

இதைக் குடிமக்கள் மூலம் கேட்டறிந்த கண்டியூரன் அவன் மேல் படைகொண்டு சென்று போரிட்டு இறுதியில் தன் குந்தப்படையால் இயமனுலகம் அனுப்பினான். அதனால் குடிமக்கள் அவனைப் போற்ற அரசாண்டிருந்தான்.

11.முதுகுன்ற மணியன்

பழமலை என்னும் விருத்தாசலத்தை ஆண்டு வந்த பாராயணம் என்பவனுடைய தவத்தால் பிறந்தவன் முதுகுன்ற மணியன் பழமலை நாதரின் திருப்பணிகள் பதிந்த மனமுடையவன் வரலாற்று முறையில் நூல்களை ஓதி உணர்ந்து யானை ஏற்றம், குதிரை, வில்வித்தை முதலியவைகளில் நன்கு தேர்ச்சி பெற்றவன். உரிய காலத்தில் முடிசூட்டப் பெற்று அரசாட்சி செய்தவன். மணவூர் என்னும் நகரத்திற்கு அதிபதியான மந்தகாசன் என்பவன் வேண்டிக் கொண்டதால் மளவ தேசத்து அரசன் மீது படை எடுத்துச் சென்று, அவனைப் புறங்காட்டி ஓடச் செய்தான். பின் அம் மளவ மன்னன் இவனைச் சினேகித்து அரசாண்டான்.

12.தஞ்சை வேம்பன்

இவன் தஞ்சை நகரை ஆண்டு வந்த வீரம் மிக்க மன்னவன் ஏழைகட்கும் பொருள் கொடுத்து ஆதரிக்கும் சேரமன்னனை விடச் சகல துறைகளிலும் மேன்மை உடையவன். இவனுடைய கையில் உள்ள குந்தமானது. வஞ்சமே உருவான மாயை உருவம் பெற்று வந்த குந்தமாகும். இது ஊழிக் காலத்து உருத்திரன் கையில் உள்ள முத்தலைச் சூலாயுதத்திற்கு ஒப்பானது. தஞ்சை வேம்பன் எத்துன்பம் அடைந்தவர்களையும் ஆதரித்து உதவி செய்பவன் குடிகளைத் தாய்போலக் காப்பவன். எதிர்த்தவர்கள் எவரும் வென்று திருப்பியதாக வரலாறே இல்லை.

# 13.களிப்பொருபது

(மூலமும் பொழிப்புரையும்)

இது குலோத்துங்க சோழனால் தொகுக்கப்பட்டது.

செங்குந்த குலத்துப் பெரியவர்கள் சிலர் தமது மரபினரும் கவிச் சக்கரவர்த்தியுமான ஒட்டக் கூத்தர் அவர்களை அணுகி எமது குலப் பெருமையினைக் கூறும் நூல் ஒன்று ஆக்கித் தருமாறு வேண்டி நின்றனர் அதற்கு அவர் நாமே நமது குலப் பெருமையைக் கூறுவது எமக்கு இழிவான செயலாகும். எனக் கூறி மறுத்து நிற்க அதனை அவர்கள் ஒப்புக் கொள்ளாது. அவரைப் பலவாறு வற்புறுத்தினர். அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக் கொண்ட ஒட்டக் கூத்தர் அவர்கள் ஒரு கடும் நிபந்தனையை முன் வைத்தார்.

அதாவது, நம் குலத்தின் குடிக்கொரு தலை மகனின் தலைகள் ஆயிரத்தெட்டினை வெட்டி அதனை அடுக்கி சிங்காசனம் அமைத்துத் தாருங்கள். அதன் மீது இருந்து நமது குலப் பெருமையைப் பாடுகிறேன். அதுதான் எமக்குச் சிறப்பாகவும் அமையும் என்று கூறினார்.அதனைக் கேட்ட அக் கணமே மிகவும் களிப்படைந்து அவ்வாறே செய்ய ஒப்புக் கொண்டனர்.

அதன் பிரகாரம் உடனடியாகத் தம் குலத்தவர் இருக்கும் ஊர்கள் தோறும் சென்று, விபரத்தைக் கூறி வெட்டிய தலைகளை வண்டி வண்டியாகக் கொண்டுவந்து குறிப்பிட்ட இடத்தில் தலைகளை அடுக்கி சிங்காசனம் அமைத்துக் கொடுத்தனர். இச் செயலைக் கேள்விப்பட்ட சேர, சோழ, பாண்டிய மன்னர்களும், புலவர்களும், குடிமக்களும் குலோத்துங்க சோழ மன்னன் அரண்மனையில் கூடினர். இவ் அரும் செயலைக் காண வான் உலகில் தேவர்களும் கூடி இருந்தனர். கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் அவர்கள் அமைக்கப்பட்ட தலைச்சிங்காசனத்தில் அமர்ந்திருந்து நவ வீரர் கைகளில் உமை அம்மையால் கொடுக்கப்பட்ட குந்தம் எனும் ஈட்டியின் பெயரால் "ஈட்டி எழுபது" என்னும் பிரபந்தத்தை பாடி முடித்தார்கள்.

அதனைத் தொடர்ந்து வெட்டப்பட்ட தம் குல வீரர்கள் உயிர்பெற வேண்டி கலைவாணியைத் துதித்து "எழுப்பெழுபது" என்னும் பிரபந்தத்தைப் பாடினார்கள். ஒட்டக்கூத்தரின் வேண்டுதலின்படி அங்கிருந்த தலைகள் நாலா திசைகளிலும் பறந்து அந்தந்த உடல்களோடு பொருந்தி உயிர்பெற்றெழுந்து மகிழ்ச்சியில் ஆர்ப்பரித்தனர். இவ் அற்புதச் செயலைக் கண்ட அனைவரும் அதிசயித்து அவரவர்களால் பாடப்பட்டதுதான் "களிப்பொருபது" என்னும் தனிப்பாடல் தொகுதியாகும். அவற்றுள் தற்போது கிடைக்கப்பட்ட பத்துப்பாடல்கள் இங்கே பொழிப்புரையுடன் சேர்க்கப்பட்டுள்ளன.

அசரீரி

01. இந்தக் கைக் கோளர் இசைக்கெண் கணன் படைத்த
எந்தக் கைக் கோளர் இணை ஆவாரே- அந்திப்
பிறையணி கைக் கோளனுருப் பெற்றவன்பால்- வைகும்
நிறையணி கைக் கோளரே நேர்.

பொழிப்புரை:-

ஒட்டக் கூத்தர் இருந்து பிரபந்தம் பாடுதற்குத் தங்கள் தலைகளை வெட்டிக் கொடுத்து பின்பு அவரால் எழுப்பப்பட்ட இந்தக் "கைக்கோளர்" எனப்படும் செங்குந்தருடைய புகழுக்கு எட்டுக் கண்களுடைய பிரம தேவனால் படைக்கப்பட்ட எந்தச் செயலைக் கொண்டவர் புகழும் இணையாக மாட்டாது. அந்தியில் தோன்றும் பிறைச் சந்திரனைத் தலையில் தரித்த சிவபெருமானது உருவத்தைப் பெற்று அவனருகில் இருக்கும் நிறைந்த அழகுடைய உருத்திரரே இவர்கட்குப் புகழால் இணையானவர்கள். பிறர் ஒருவரும் இணையாகமாட்டார்கள். (உருப்பெற்றவர் என்பது சாரூப, சாலோக, சாமீப, சாயுச்சியம் என்னும் நான்கு நிலைகளில் சிவசாரூபம் பெற்றவர்களை)

ஔவையார்

02. மூவுலகை யுங்கடந்து மூதண்டப் பித்திகையை
மேவிஅதற் கப்பாலும் மின்னியதே — பூவிலொன்றும்
மங்காத நூல்வேண்டி மாண்கூத்தற் கிட்டசிரச்
சிங்கா தனத்லைவர் சீர்.

பொழிப்புரை:-

பூவுலகில் என்றும் மறையாமல் நிலைத்து நிற்கும் தன்மையை உடைய (ஈட்டி எழுபது) ஒட்டக் கூத்தரால் இயற்றித் தரப்படல் வேண்டும் என்பதற்காக, பெருமையை உடைய அவருக்கு சிரச் சிங்காசனம் இட்ட செங்குந்தத் தலைவர்களுடைய புகழ் ஒளி, மூன்று உலகங்களையும் கடந்து போய், அண்டங்களினுடைய மேல் முகட்டைப் பொருந்தி நின்று, அதற்கு அப்பாலும் போய் நின்று பிரகாசித்தது.

(பித்தகை — சுவர், பூவில் - பூவுலகத்தில், மாண் - பெருமை)

கம்பர்

03. கந்தழியென்(று) ஆன்றோர்கள் கண்டு நிதம்பரவும்
எந்தை முருகன் இளையவரால் - சந்ததியில்
வந்துமகிழ் செங்குந்தர் வாய்மைதனை என்சொல்கேன்
செந்திருபோல் செல்வர்களே தேர்ந்து.

பொழிப்புரை:-

திருமாலால் புரக்கப்படும் செல்வக்குடியில் தோன்றியவர்களே! ஆன்றோர்கள், "கந்தழி" எனச் சொல்லிப் புகழும் கடவுள் கந்தனாகிய அவனே என்று அறிவுடையவர்கள் நாள் தோறும் கண்டு வணங்கித் துதிக்கின்ற, எம் தந்தையாகிய முருகப் பெருமானுக்கு இளையவர்களாகிய வீரவாகுதேவர் முதலிய நவவீரருடைய மரபில் வந்து தோன்றி மகிழ்ந்து திருச் செங்குந்தப் படையை கையில் தரித்த செங்குந்தருடைய சொல் மாறுபடாத தன்மையினை ஆராய்ந்து என்னவென்று சொல்லிப் புகழ்வேன்.

(கந்தழி – கந்தன், தொல்காப்பியத்தில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது)

<u>புகழேந்தி</u>

04. விண்ணகத்தோர் பூமாரி வீசியதும் ஓர்வியப்போ
மண்முகத்தே செங்குந்தர் மாய்சிரங்கள் - எண்முகத்தும்
சிந்தியதத் தம்முடலைச் சேர்ந்தொட்டிக் கொண்டொலித்து
வந்தவிதம் எண்ணவருங் கால்.

பொழிப்புரை:-

இந்த மண்ணுலகத்தில் செங்குந்தத் தலைவர்கள் சிரச்சிங்காதனம் அமைக்க அரிந்து வீசிய தலைகள் எட்டுத் திசைகளிலும் சிதறிக் கிடந்த தங்கள் தங்கள் உடல்களோடு சேர்ந்து பொருந்தி உயிர்பெற்று மீண்டும் பேரொலியோடு வந்த தன்மையை எண்ணும் போது உண்டான வியப்பே பெரு வியப்பு, அதைக் கண்டு தேவலோகத்தில் இருந்தவர்கள் மலர்மழை பொழிந்தனர். அதற்கு ஈடான ஒரு வியப்புக்குரிய செயலாகுமா.

<u>அம்பிகாபதி</u>

05. குந்தர் பெருமிதத்தைக் கூறுவதென் பார்த்திபர்காள்
சந்தத் தமிழ்க் கடலார் தாம்போற்ற – விந்தைத்
தலைதந்தார் பாடலுக்குத் தாமென்று பூவில்
கலை தந்தார் மக்களுக்குக் காண்.

பொழிப்புரை:-

சந்தப் பாடல்கள் என்னும் தமிழ்க் கடலுக்கு உரியவர்களான கவிபாடுவதில் வல்ல புலவர்கள் மகிழ்ந்து போற்றுமாறு ஈட்டி எழுபது என்னும் நூலைப் பெற இதுவரை இல்லாத புதுமையாகத் தம் தலைகளையே செங்குந்தர்கள் அரிந்து கொடுத்தனர். அது போன்றே பூமியில் உயர்ந்த மானத்தைக் காப்பதற்கு மக்களுக்கு

ஆடை நெய்து கொடுத்தார்கள். மன்னர்களே இப்படிப்பட்ட சிறப்பினை உடைய செங்குந்தர்களின் பெருமைகளை எப்படி அளவிட்டுக் கூறுவது.

சோழமன்னன்

06. ஏதேன் எடுத்துரைக்கேன் என்னாசான் தன் கவியை
போதுன் இருந்துவளர் பொன்மாதே - ஈதரவா
சாகாத கல்வியென்று சான்றோர்கள் சாற்றிவைத்த
ஏகாந்தச் சொல்லாகும் எண்.

பொழிப்புரை:-

செந்தாமரையிலிருந்து வாழும் திருமகளே என் குருநாதராகிய ஒட்டக்கூத்தர் அருளிய நூலின் சிறப்பை நான் என்ன என்று எடுத்துச் சொல்வேன். சான்றோர்களாய் உள்ளோர் இஃது அன்றோ உலகில் என்றும் அழியாப் புகழுடன் நிலைத்து நிற்கும் நூல் என்று சொல்லி வைத்த ஒரு தனிப்புகழை உடைய நூல் அது என்று அறிவாயாக.

பாண்டிய மன்னன்.

07. அன்றும் கவிநயத்தை ஆய்ந்தறிந்தேன் பாண்டியில்
இன்றும் கவிநலத்தை ஈங்கறிந்தேன் - என்றும்தான்
கூத்தற் கெதிருண்டோ கூறும் அவனிதனில்
பார்த்திபரே காண்பின் படித்து.

பொழிப்புரை:-

பாண்டிய நாட்டில் பல சந்தர்ப்பங்களில் பல புலவர்கள் பாடிய கவிகளை அவர்கள் பாடிய போது, ஆராய்ந்து அக்கவிகளின் சிறப்பினை அன்று உணர்ந்தேன். இன்று சோழ நாட்டில் பாடப்பட்ட ஒட்டக்கூத்தருடைய நூலின் மூலம் அச்சிறப்பினை அறிந்தேன். இந்த உலகத்தில் கவி பாடுவதற்கு ஒட்டக்கூத்தருக்கு இணையான புலவர் ஒருவரும் இல்லை என்பதை அரசர்களே! நீவீர் படித்து உணர்ந்து கொள்ளுங்கள்.
(பார்த்திபர் - அரசர்)

சேரமன்னன்

08. விண்கண்ட தேவரெல்லாம் வீற்றிருந்தார் ஈங்கென்று
கண்கண்ட மாமுனிவர் காட்டினார் - பண்கொண்ட
கூத்தன் கவிக்கு குவிந்ததலை ஆசனத்தை
பார்த்திடவே ஈன்றாய்ப் பதிந்து.

பொழிப்புரை:-

புகழுடைய ஒட்டக் கூத்தர் தங்கள் மரபினர் மீது உயர்ந்த இசையோடு கூடிய கவிபாட வேண்டும் என்பதற்காக வெட்டிக் குவிக்கப்பட்ட தலைகளினால் அமைக்கப்பட்ட சிரச்சிங்காசனத்தின் அழகைக் காண்பதற்காக விண்ணுலகத்திலுள்ள தேவர்கள் எல்லாம் இங்கே நன்றாகப் பொருந்தி அமர்ந்திருப்பதைப் பாருங்கள் என்று தங்கள் கண்களாற் கண்டு மகிழ்ந்த சிறப்புடைய முனிவர்கள் ஏனையோருக்கும் விளங்கக் காட்டினார்கள்.

<u>அஞ்சனாட்சி</u>

09. வாழிசக்ர வர்த்திப்பேர் வாய்ந்த ஒட்டக் கூத்தன்பார்
ஏழினோடும் ஏழுமதன் மேலுநிலை - சூழச்செல்
ஈட்டி எழுபதெனும் இந்நூற்கொப் பின்மை காண்பீர்
நாட்டிலுயர் வாணர்களே நன்கு.

பொழிப்புரை:-

நாட்டில் வாழும் உயர்ந்தோர்களே, ஏழுடன் ஏழு என்று சொல்லப்படுகின்ற பதினான்கு உலகங்களிலும் அதற்கு அப்பாலும் நிலைபெற்றுப் புகழைப் பரப்புகின்ற ஈட்டி எழுபது என்னும் இந்த நூலுக்கு வேறு எந்த நூலும் ஒப்பில்லை என்பதை கண்டு உணர்ந்து கொள்ளுங்கள். அவ்வாறு புகழுடைய இந்த நூலை இயற்றிய கவிச்சக்கரவர்த்தி என்னும் பட்டப் பெயர் பெற்ற ஒட்டக்கூத்தர் நெடுநாள் நிலைத்து வாழ்வாராக.

<u>சைவாசாரியார்</u>

10. வாழிஒட்டக் கூத்தன்! வகைவந்தார் தாம்வாழி!
வாழி மன்னன் எந்நாளும் வையகத்தில் - வாழியவே
கொலைகளவு கள்காமம் கோள்விலகி மாக்கள்
உலைவில்லா இன்ப முகந்து.

பொழிப்புரை:-

(ஈட்டி எழுபது, எழுப்பெழுபது என்னும் சிறந்த நூல்களைப் பாடிய) கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் என்றும் வாழ்வாராக! அக் கூத்தர் மரபில் தோன்றியவர்கள் வாழ்வார்களாக! உலகை ஆளுகின்ற அரசன் என்றும் வாழ்வானாக! இவ்வுலகில் வாழுகின்ற மக்கள் கொலை செய்தல், களவாடல், கள்ளுண்ணல், காமம் கொள்ளல் முதலிய குற்றங்களில் இருந்து விலகி, நிறைவான இன்பத்தை அடைந்து எந்நாளும் வாழ்வாராக.

